எங்க ஊர்களில்
சிறுகதைகள்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் நூற்றாண்டு விழா சிறப்பு வெளியீடு!

சங்க நூல்களில்

முருகன்

சங்க நூலறிஞர்

பி. எல். சாமி, பி. எஸ்சி.,

(ஐ.ஏ.எஸ். ஓய்வு)

சேகர் பதிப்பகம்

சிறந்த நூல் வெளியிடுவோர்

66/1, பெரியார் தெரு,
எம் ஜி ஆர் நகர், சென்னை 600 078.

முதற் பதிப்பு : டிசம்பர் 1990

விலை ரூ. 16.

அச்சிட்டோர் :

அமுதன் அச்சகம் 66 பெரியார் தெரு.
எம் ஜி ஆர் நகர், சென்னை-600 078.

பிழை திருத்தம்

பக்.	வரி	பிழை	திருத்தம்
10	5	குரிசி	குரிசில்
10	7	பெருநராற்றுப்படை	பொருநராற்றுப்படை
12	25	முருக்கி	முருக்கிய
28	19	வேலப்பு	வேல!
75	1	புதல்வி	புதல்வன்
75	13	கடுஞ்ஞர்	கடுஞ்சூர்
	11, 12 (2 வரிகள்)		'கடுவெளி தொகுப்ப ஈண்டிய வடுஆழ் எக்கர் மணலினும் பலவே'

புதுவை அறிஞர் பி. எல். சாமி அவர்களின்
அரிய நூல்கள்

1. சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்
2. சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்
3. சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்

—சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

4. தமிழிலக்கியத்தில் தாய் தெய்வ வழிபாடு

—N. C. B. H.

5. கம்பன் காவியத்தில் உயிரினங்கள்

—கம்பன் கழகம், புதுவை

சென்னை சேகர் பதிப்பகம் வெளியீடுகள்

1. சங்க நூல்களில் மீன்கள்
2. சங்க நூல்களில் மணிகள்
3. Common Nemes and Myths of the Flora and Fauna Dravidian Indo-Aryan Languages.
4. இலக்கியத்தில் அறிவியல்
5. சங்க நூல்களில் விந்தைப் பூச்சி
6. இலக்கிய ஆய்வு (அறிவியல்)
7. தமிழ்நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம்
8. சங்க நூல்களில் முருகன்

முகவுரை

சங்க நூல்களில் முருகனைப்பற்றிப் பல பாடல்களில் செய்திகள் காணப்படுகின்றன. அவைகளை ஆராய்ந்து விளக்குவதே 'சங்க நூல்களில் முருகன்' என்ற எனது இந் நூலின் நோக்கமாகும்.

முதன் முதலில் முருகன் என்ற பெயர்க் காரணம் ஆராயப்படுகின்றது. இதுவரை இது பற்றி வெளியிட்டுள்ள ஆசிரியர் பலருடைய கருத்தை மறுத்து, நான் புதிய காரணம் கூறியிருக்கிறேன்.

திருமுருகாற்றுப்படையில் முருகனை அந்தணர் தொழும் முறை கூறப்பட்டுள்ளது. வேலன் வழிபடும் முறையும் கூறப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படை, சங்க காலத்துக்குப் பிற்காலத்தில் தோன்றிய நூலாயினும் அதில் காணப்படும் வேலன் வழிபாடு, சங்க கால வேலன் வழிபாடு ஆகும்.

திருமுருகாற்றுப்படையில் வேலன் செய்யும் வழிபாட்டுச் சடங்குகளுடன் வட மலையாளத்தில் வேலன் களம் இழைத்து இரத்தப் பலி பெய்து செய்யும் சடங்குகள் ஒத்திருப்பதைப் பற்றி நான் விளக்கியுள்ளேன்.

புதுவை மாநிலப் பகுதியான வடமலையாள நாட்டில் உள்ள மாஹே நகரில் நான், வேலன் களம் இழைத்து வழிபாடு செய்வதைக் கண்டேன்.

வேலன் என்ற பழங்குடி இனத்தினரைச் சேர்ந்த குஞ்சுராமன் என்ற பூசாரியை வரவழைத்து, களமிழைத்து, இரத்த பலி வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்து,அதை வண்ணப் படங்களாக [Colour Photographs] எடுத்துக் கொண்டேன். அப் படங்கள் இந் நூலில் வெளியிடப்பட்டுள்ளன. படங்கள் நான் மாஹேயில் 1962ஆம் ஆண்டு ஆட்சித் தலைவராக இருந்தபோது எடுக்கப்பட்டவை.

பரிபாடலிலும் திருமுருகாற்றுப் படையிலும் முருகன் பிறப்புக் கதை, மகாபாரதம், இராமாயணம் முதலிய வட நூல்களில் இருந்து எடுத்துக் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது.

அகநானூறு முதலிய சங்க நூல்களில் முருகனை வடவாரிய ஸ்கந்தனுடன் இணைத்துக் கூறவில்லை. பரிபாடலிலும் திருமுருகாற்றுப்படையிலும் அவ்வாறு இணைத்துக் கதைகள் கூறப்பட்டுள்ளன. அக் கதைகள் ஆராயப்பட்டுள்ளன.

முருகன் பிறப்பு பற்றித் தமிழ் நாட்டில் தோன்றிய புராணக் கதையும் விளக்கப்பட்டுள்ளது.

சங்க நூல்களில் முருகனுக்குத் தாய் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் தந்தை கூறப்படவில்லை.

முருகன் எப்படி, பழங்குடியினரின் தாய்த்தெய்வமான பழையோளின் மகனாகவும், தமிழரின் தாய்த் தெய்வமான கொற்றவையின் மகனாகவும், வடவாரிய கலப்பு ஏற்பட்ட பின், மலைமகள் பார்வதியின் மகனாகவும் கருதப்பட்டுள்ளான் என்பது விளக்கப்பட்டுள்ளது.

சங்க நூல்களில் முருகனைப்பற்றிக் கூறப்பட்டுள்ள எல்லாச் செய்திகளும் இதில் ஆராயப் பட்டு விளக்கப்பட்டுள்ளன.

இந் நூலைப் பல இடையூறுகளுக்கு இடையே வண்ண படங்களுடன் சேகர் பதிப்பக உரிமையாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் வெளியிட்டுள்ளார். அவருக்கு என் நன்றி உரித்தாகுக. தமிழ்கூறும் நல்லுலகம் இதுவரை எனது நூல்களை ஏற்றுக் கொண்டது போல இந்நூலையும் வரவேற்கும் என நம்புகிறேன்.

அன்பன்
பி.எல். சாமி

★

பதிப்புரை

கடவுள் பிறந்த கதை!

மானிடர், தோற்றம் முதலே அச்சமும் வியப்பும் கொண்டு, மருண்டு மயங்கியவராய் வளர்ந்த நிலையை, வரலாறு தெளிவாகக் காட்டுகிறது.

கடவுள் பிறந்தார்! கடவுள் பிறந்தார்!
கவலைகள் சூழ்ந்த மனிதர்கள் நெஞ்சில்
கடவுள் பிறந்தார்! கடவுள் பிறந்தார்!

பயந்தவன் பயத்தை வணங்குகிறான் — அதைப்
பார்த்தவரோ மனம் மயங்குகிறார்!
வியந்தவன் வியப்பைத் தொழுவதனால்
விழுந்தவன் கதறி அழுவதனால் ... (கடவுள்)

இந்த வரலாற்று உண்மையை, ஆதிமுதலாகக் கிடைத்துள்ள சான்றுகளை முறையாக வகுத்துக் காட்டியுள்ளரர் இந் நூலாசிரியர்.

இன்று வணங்கப்படும் முருகனின் கதை, ஆதியில் எவ்வாறு இருந்துள்ளது என்பதை இந் நூலால் நாம் அறிகிறோம். ஒரு புள்ளி, மலையாக வளர்ச்சி பெற்றிருக்கிறது.

மனிதனின் கற்பனை, காலந்தோறும் மாறி, வளர்ந்து வளர்ந்து, மனித வாழ்வின் அமைப் பிலேயே இன்று 'தெய்வநிலை' வைத்து வணங்கப் பெறுகிறது.

கற்பனைக்கு எவ்வளவு ஆற்றல்!

நம்பிக்கைக்கு எத்தனை உத்திகள் உதவி யுள்ளன.

சங்க நூல் ஆய்வறிஞர் புதுவை பி. எல். சாமி அவர்களின் அரிய உழைப்புக்கு இந்நூல் ஒரு எடுத்துக்காட்டு! அவர்கட்கு எமது நன்றியுரியது.

தமிழ்க் கல்வியுலகும் மாணவரும் இந்நூலைக் கற்று, அறிவு வளம் பெறுமாறு வேண்டுகிறோம்.

அன்பன்

வெள்ளையாம்பட்டு சுந்தரம்

உள்ளடக்கம்

வலிமை மிக்கவன்

முருகனைத் தமிழரின் தனிப் பெருங் கடவுள் என்று கூறுவர். இன்றும் தென்னாட்டில்தான் முருகனது வழிபாடு நிலைத்துள்ளது.

முருகன் என்ற பெயர் எப்படித் தோன்றிற்று என்பதை ஆராய வேண்டும். ஆராய்ச்சியாளர் பலர், இளமை, அழகு என்ற பொருள்களில் முருகன் என்ற பெயர் தோன்றியதாகக் கூறுவர். ஆனால் அக் கருத்துக்குச் சங்க நூல்களில் சான்றுகள் ஏதும் இல்லை. இக் கருத்து சங்க காலத்திற்குப் பின்னர் தோன்றியதாகும்.

முருகன் எனில் அழிப்பவன், சிதைப்பவன் என்பதே சங்க நூல்களில் அடிப்படைப் பொருளாக வழங்கி யுள்ளது.

முருகன் வீரமிக்கவன்
சீற்றமுடையவன்
வலிமையுடையவன்

என்றே சங்க நூல்கள் கூறுகின்றன.

" புலிக்கணத்து அன்ன நாய்த்தொடர் விட்டு
முருகன் அன்ன சீற்றத்துக் கடுந்திறல்
எந்தையும் இல்லன் ஆக "

அகநானூறு : 158

" முருகன் சீற்றத் துருகெழு குரிசி
தாய்வயிற் றிருந்து தாய மெய்தி "

பெருநராற்றுப்படை : 131-132

" முருகன் சீற்றத்து உருகெழு குரிசில் "

புறநானூறு : 16

' முருகுடன்று கறுத்த கலியழி மூதூர் "

பதிற்றுப்பத்து : 26—12

" முருகு உறழ் முன்பொடு கடுஞ்சினஞ் செருக்கிப்
பொருத யானை வெண்கோடு கடுப்ப "

நற்றிணை : 225

" அடுபோர் மிஞிலி செருவிற்கு உடைஇ
முருகுஉறழ் முன்பொடு பொருதுகளஞ் சிவப்ப "

அகம் : 181

" சூர்மருங்கு அறுத்த சுடரிலை நெடுவேல்
சினம்மிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை "

அகம் : 59

" கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்,
சூர்நவை, முருகன் சுற்றத்து அன்ன, நின் "

புறம் : 23

' முருகுறழப் பகைத்தலை சென்று
அகல் விசும்பி னார்ப்பிமிழப் "

மதுரைக்காஞ்சி : 181—182

முருகன் சீற்றம், முருகன் சினம், முருகனது வலிமை மேற்காட்டிய பாடல்களில் கூறப் பட்டுள்ளன. முருகன் போரில் சிறந்தவன் என்று கூறப்பட்டுள்ளது.

" உருவக் குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அறுகோட்டு யானைப் பொதினி ஆங்கண் "

அகம் : 1

அடியொதுங்கிப் பிற்பெயராப்
படையோர்க்கு முருகு அயர
அமர்கடக்கும் வியன்றானைத்
தென்னவர் பெயரிய துன்னருந் துப்பின் "

மதுரைக்காஞ்சி : 37-40

" முருகுறழப் பகைத்தலைச் சென்று
அகல் விசும்பி னார்ப்பிமிழ "

மதுரைக்காஞ்சி : 181-182

மேற்காட்டிய பாடல்களிலிருந்து முருகன் போரில் வல்லவன், வெற்றியைச் சூடுபவன் என்பது தெளிவாகிறது.

" செருமிகு சேஎயொடு உற்ற சூளே "

அகம் : 266

" செருமிகு சேஎய்! நிற் பாடுநர் கையே "

புறம் : 14

சேயாகிய முருகன் போரில் வல்லவன் என்று அகநானூறும் புறநானூறும் கூறியுள்ளது குறிப்பிடத் தக்கது. புறநானூற்றுப் பாடல் (56) 'முருகொத் தீயே முன்னியது முடித்தலின்' என்று கூறியுள்ளது.

பரிபாடலில் 'காய் கடவுள் சேய்' என்று முருகன் அழைக்கப்படுகின்றான். இதற்கு அறிஞர் வானமாமலை காய் என்பதை அக்கினியாகக் கொண்டு, 'அக்கினியின் மகனான ஸ்கந்தனை ஒப்பிட்டுக் கூறியுள்ளது' என்று எழுதியுள்ளார்.

காய் என்பது காயும், கோபிக்கும் என்ற பொருளில்தான் வந்திருக்கின்றது என்பது கவனிக்கத் தக்கதாகும்.

முருக்குபவனே முருகன்

முருகன் என்ற பெயருக்கு வேர்ச் சொல் முரு என்பதாகும். இந்த முரு எறை வேர்ச் சொல்லிலிருந்தே முருக்கிய என்ற வினைச்சொல் தோன்றிற்று.

'' ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி ''

புறம் : **18**

'' மைந்துடை மல்லன் மத வலி முருக்கி ''

புறம் : **80**

'' ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்நின்று ''

புறம் : **262**

'' ஒளிறு வாள்அருஞ் சமம் முருக்கி
களிறெறிந்து பெயிதல் காளைக்குக் கடனே ''

புறம் : **312**

'' பொருந்தா மன்னர் அருஞ்சம முருக்கி ''

தகடூர் யாத்திரை

'' மூவெளியின் முருக்கி முரண்மிகு செல்வனும் ''

திருமுருகாற்றுப்படை : **154**

'' மதில்முக முருக்கிய தொடிசிதை மருப்பில்
கந்துகால் ஒசிக்கும் யானை ''

அகம் : 164

'' முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிப்
புறஞ்சிறை வாரணம் புக்கன புரிந்தென் ''
சிலப்பதிகாரம் : 10 : 247-248

மேற்காட்டிய பாடல்களில் முருக்கி என்ற சொல், கெடுத்த, சிதைத்த, வென்ற என்ற பொருள்களில் வந்திருப்பதைக் காணலாம். இதே பொருள்களில்தான் ஏற்கனவே சுட்டிக் காட்டின பாடல்களில் முருகனைப் பற்றிச் சங்கப் புலவர்கள் கூறியுள்ளனர். ஆதலின் முருக்குபவனே முருகன் என்று சொல்ல வேண்டும்.

முருகன் முருக்கி என்ற இரண்டு சொற்களுக்கும் அடிப்படையான வேர்ச்சொல் முரு என்பதாகும்.

அழகா? மணமா?

சங்க நூல்களில் முருகு என்ற சொல் இளமையையோ அழகையோ குறிக்கவில்லை. திரு. வி. கலியாணசுந்தரனார் முருகன் அல்லது அழகு என்ற நூலை எழுதியுள்ளார். அழகு என்ற பொருள் சங்க காலத்திற்கு மிகப் பின்னர் தோன்றிய பொருளாகும்.

ஆனால், சங்க நூல்களில் முருகு என்ற சொல், ஒரு சில பாடல்களில் மட்டும் நறுமணத்தைக் குறித்து வழங்கியுள்ளது.

"உருகெழுதிற லுயர்கோட்டத்து
முருகமர்பூ முரண் கிடக்கை
வரியணி சுடர் வான் பொய்கை"

பட்டினப்பாலை : 37-38

"முருகுமுரண் கொள்ளும் தேம்பாய் கண்ணிய"

அகம் : 28

"உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழில்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்"

அகம் : 137

" சாரல் வேங்கை படுசினைப் புதுப்பூ
முருகுமுரண் கொள்ளும் உருவக் கண்ணியை "

அகம் : **288**

" முருகுவாய் முட்டாழை நீண்முகைப்பார்ப் பென்றே"

திணைமாலை நூற்றைம்பது : **36**

" முருகியல் கான லகன்கரை யாங்கண் "

திணைமொழி ஐம்பது : **46**

" உருளிணர்க் கடம்பி னெடுவேட் கெடுத்த
முருகு கமழ்புகை நுழைந்த வணியும் "

பரிபாடல்: 21:56—57

" முருகுவிரி தாழைக் கோட்டுமிசை யிருந்து "

சிலப்பதிகாரம்: 27:236

மேலே காட்டிய பாடல்களில் முருகு நறுமணத்தையே குறித்து வழங்கி யுள்ளது. இளமையையோ, அழகினையோ குறித்து யாதொரு சங்கப் பாடலிலும் முருகு என்ற சொல் வழங்கவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

ஸ்கந்தன் — அழிப்பவன்!

வடமொழியில் ஸ்கந்தன் என்று முதன்முதலில் முருகன் அழைக்கப்பட்டான். ஸ்கந்தன் என்பதற்கு வடமொழி அறிஞர்கள் அழிவு (Destruction) சிதைப்பது (Perishing) என்று பொருள் கூறியுள்ளனர்.

வடமொழி நூல்களில் ஸ்கந்தன் அழிப்பவனாகவே பிற்காலத்தில் கூறப்படுகிறான்.

ரிக் வேதத்திலேயோ, முற்பட்ட வடமொழி நூல்களிலேயோ ஸ்கந்தன் என்ற பெயர் வழங்கவில்லை.

ஆனால் வடமொழி ஸ்கந்தன் என்பதற்குக் கூறும் பொருள் சிதைக்கும் முருகன் பொருளுடன் ஒத்து வருகின்றது.

சங்க நூல்களில் முருகன் வழிபாடு குறித்துப் பல செய்திகள் வருகின்றன.

குறி பார்த்தல்

தலைவி தலைவனுக்காக ஏங்குகிறாள். அவள் உடல் மெலிவுறுகிறாள். இந்த வேறுபாட்டிற்குக் காரணத்தைக் கண்டுகொள்ள, தலைவியின் தாய் கட்டுப் பார்ப்பதற்கோ, கழங்குப் பார்ப்பதற்கோ, ஏற்பாடு செய்கிறாள்.

முதுபெண்டிர் நெல்லை வைத்துக் குறி கூறும் சடங்கு 'கட்டுக்குறி' ஆகும்.

'கழங்குக் குறி' வேலனால் நடத்தப்படும் சடங்கு ஆகும்.

இந்த இரண்டு சடங்குகளிலும் தலைவியை முருகன் அணங்கினதைக் கண்டுபிடித்து அதற்குத் தெய்வ சாந்தியான வெறியாடலைத் தலைவியின் தாய் ஏற்பாடு செய்கின்றாள்.

முருகன் செம்முது பெண்டிர் மேல் ஆவேசித்துக் குறிப்பு உணர்த்துவான் என்றும் நம்பினர்.

'களவல ராயினும் காமமேற் படுப்பினும்
அளவுமிகத் தோன்றினுந் தலைப்பெய்து காணினுங்
கட்டினுங் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாய் செய்திக் கண்ணும்'

தொல். பொருள் : 113—1—4

மேலே காணப்பட்டத் தொல்காப்பியப் பாடலில், 'கட்டின் மூலமாக கழங்கின் மூலமாகக் குறி கண்டு, வெறியாடுவதே முறை' என்று தலைவியின் தாய் கருதி, அதற்குரிய ஏற்பாடு செய்வது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

'நல்நுதல் பரந்த பசலைகண்டு அன்னை
செம்முது பெண்டிரொடு நெல்முன் நிறீஇக்
கட்டின் கேட்கும் ஆயின் வெற்பில்'

நற்றிணை : 288

'கட்டு' கேட்கும் கட்டுவித்தி குறப்பெண்ணாக இருப்பாள். இவளுடைய தொழில் குறி சொல்லுதல் ஆகும். இவளையே அகவன் மகள் என்று சங்க நூல்கள் குறிப்பிடும்.

கட்டுப் பார்த்தல் என்பது முறத்தில் நெல்லை வட்டமாக பரப்பி வைத்து தெய்வங்களைப் பாடி எண்ணிப் பார்த்து கட்டுவித்தி காணும் குறி என்பர். கட்டுவித்தி மேல் முருகன் ஆவேசப்பட்டு வருவது உண்டாம். முருகன் புலைத்தி மேல் ஆவேசப்பட்டு வந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

'ஏறுடைப் பெருநிலா பெயர்தரப் பெயராது
இலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வின் மறவ ரொடுக்கங் காணாய்;
செல்லல் செல்லல்; சிறக்கநின் உள்ளம்
முருகுமெய்ப் பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கும் ஆன்மேல்
புடையிலங்கு ஒள்வாள் புனைகழ லோயே'

புறநானூறு : 259

இந்தப் பாட்டில் 'முருகு மெய்ப்பட்ட புலைத்தி போல' என்று கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

முருகனின் பூசாரி

கழங்கின் வழியாகவும் குறி பார்க்கப்படும். இந்த முறையில் குறி சொல்பவன் பெயர் வேலன் என்பதாகும். இவன் முருகனின் பூசாரியாவான். படிமத்தான் என்றும் அழைக்கப்படுவான்.

வேலன், கழங்கின் மூலமாக கண்டுபிடித்து முருகன் தலைவியை அணங்கி (பற்றி) யுள்ளான் என்று வேலன் கூறுவான். தலைவியின் தாய் வேலனைக் கொண்டு வெறியாடுதலுக்கு ஏற்பாடு செய்வாள். இச்செய்தியைப் பல சங்கப் பாடல்கள் கூறியுள்ளன.

'' நாறுகொள் பிரசம் ஊறுநா டற்குக்
காதல் செய்தவும் காதலன் அன்மை
யாதெனில் கொல்லோ தோழி - வினவுகம்,
பெய்ம்மணல் முற்றங் கடிகொண்டு
மெய்ம்மலி கழங்கின் வேலற் தந்தே''

நற்றிணை : 268

"தோடமை செறிப்பின் இலங்குவளை ஞெகிழக்
கோடேந்து அல்குல் அவ்வரி வாட
நன்னுதல் சாய, படர்மலி அருநோய்
காதலன் தந்தமை அறியா துணர்த்த
அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்
கிளவியன் தணியின் நன்றுமன் - சாரல்"

நற்றிணை : 282

"அன்னை தந்த தாகுவ தறிவன்
பொன்னகர் வரைப்பிற் கன்னந் தூக்கி
முருகென மொழியும் ஆயின்"

ஐங்குறுநூறு : 247

"பொய்யா மரபி னூர்முது வேலன்
கழங்கு மெய்ப்படுத்து கன்னந் தூக்கி
முருகென மொழியு மாயின்"

ஐங்குறுநூறு : 245

"பெய்ம்மணன் முற்றம் கவின்பெற வியற்றி
மலைவான் கொண்ட சினைஇய வேலன்
கழங்கின் அறிகுவ தென்றால்
நன்றா லம்ம நின்றவிவ ணலனே"

ஐங்குறுநூறு : 248

"பெய்ம்மணல் வரைப்பிற் கழங்குபடுத் தன்னைக்கு
முருகென மொழியும் வேலன் மற்றவன்
வாழிய விலங்கு மருவிச்
சூர்மலை நாடனை யறியா தோனே"

ஐங்குறுநூறு : 249

" தன்வழி படுஉம் நம்நயந்து அருளி
வெறியென உணர்ந்த அரிய அன்னையைக்
கண்ணினுங் கனவினுங் காட்டி, 'இந்நோய்
என்னினும் வாராது; மணியின் தோன்றும்
அம்மலை கிழவோன் செய்தனன் இது' எனின்
படுவண்டு ஆர்க்கும் பைந்தார் மார்பின்
நெடுவேட்கு ஏதம் உடைத்தோ?
தொடியோய்! கூறுமதி, வினவுவல் யானே. "

நற்றிணை: 173

வீட்டின் முன்புறம் வெண்மணலைப் பரப்பி வேலன் கழங்குக் காயை இட்டு, 'தலைவி முருகனால் நோயுற்றாள்; அதற்கு வெறியாடல் நடத்த வேண்டும்' என்று கூறுகின்றாள். இதைத் தலைவன் அறிந்து திருமணம் செய்ய வரும்படி அழைப்பது பற்றி 'வெறிப்பத்து' என்ற தலைப்பில் பத்து பாடல்கள் ஐங்குறுநூற்றில் வருகின்றன.

" பெருந்தோட் சாலினி மடுப்ப வொருசார்
அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூட் டின்னியம் கறங்கநேர் நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணித் தழூஉப் பிணையூஉ
மன்றுதொறு நின்ற குரவை சேரிதொறும்
உரையும் பாட்டும் மாட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கி "

மதுரைக்காஞ்சி: 610—617

குறிஞ்சி, மருதம் வழிபாடு

'முருகனால் நோய் வந்ததென்று வேலன் கூறி, தான் கூறிய சொற்களால் கேட்டாரை வளைத்துக் கொண்டு, வாத்தியங்கள் முழங்க, கார் மலர்க் குறிஞ்சிப் பூ சூடி, கடப்பு சூடிய முருகனைத் தன் மெய்க்கண்ணே நிறுத்தி வழிபட்டான்' என்று மதுரைக்காஞ்சி கூறியுள்ளது. மதுரைக்காஞ்சிப் பாட்டிலிருந்து வேலனாடுதல், குறிஞ்சியில் மட்டு மன்றி மருத நிலத்திலும் வழங்கியது தெரிகின்றது.

பழமுதிர் சோலையில் முருகனை வழிப்பட்டதை, திருமுருகாற்றுப்படை விளக்கமாகக் கூறியுள்ளது.

''சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ரேத்தி மேவரு நிலையினும்
வேண்டுதல் வேண்டியாங் கெய்தினர் வழிபட
வேலன் றைஇய வெறியயர் களனும்
காடுங் காவுல் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பு

மன்றமும் பொதியிறுங் கந்துடை நிலையிறு
மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர

நெய்யோ டையவி யப்பி யைது ரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ இருவிளுன்றண்டுட னுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி

குருதியொடு விரைஇய தூ வெள்ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி

நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
யிமிழிசை அருவியொ டின்னியல் கறங்க
இருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகன்

முருகிய நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த யுருகெழு வியனக
ஆடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்

கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
யோடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட''

திருமுருகாற்றுப்படை : **218-248**

வடமலையாளத்தில்
வழக்கில் உள்ளது

திருமுருகாற்றுப் படையில் விளக்கமாகக் கூறப்பட்ட வேலன் வழிபாட்டின் சில கூறுகள், இன்றும் வட மலையாள நாட்டில், வேலன் என்ற பழங்குடியினரின் (Sheduled tribe) தெய்வ வழிபாட்டில் காணலாம்.

இந்த வேலன்மார், வட மலையாள நாட்டில் (North Malabar) பூசாரிகளாக உள்ளனர். அவர்கள் தெய்வங்களைச் சாந்தி செய்யும்பொருட்டு பிற இனத்தினரால் அழைக்கப்படுகின்றனர். அவர்கள் களம் அமைத்து வழிபடுகின்றனர்.

பி. எல். சாமி பி. எஸ்ஸி., (ஐ ஏ.எஸ.)

தெய்வ ஆட்டங்கள்

இன்றும் அவர்கள் திரையாட்டம் என்று வட கேரளத்திலே நிகழ்த்தப்படும் ஆட்டங்களை ஆடுகின்றனர். இந்த ஆட்டத்திலும் சங்ககால வெறியாடலின் சில கூறுகள் உள்ளன. திரையாட்டத்தைப் பேயாட்டம் என்று சிலர் கருதுவர்.

தெற்குக் கர்னாடகத்திலும் (South Kanara) இலங்கையிலும் ஆடப்படும் இது போன்ற ஆட்டங்களும் வட மலையாளத் திரையாட்டங்களைப் போலவே உள்ளன. இந்த ஆட்டத்தைக் 'கோலம்' என்று அழைத்தனர்.

கெட்ட தெய்வங்களையும் இறந்துபோன முன்னோரையும் சிறு தெய்வங்களையும் வழிபடுவதற்காகப் பெரும்பாலும் இந்த ஆட்டங்கள் ஆடப்படுகின்றன.

ஒவ்வொரு ஆட்டமும் ஒரு தெய்வத்திற்காக ஆடப்படுகின்றது. இந்தத் தெய்வங்கள்,

கதிவனூர் வீரன், ஷேத்திர பாலன்

போன்ற புகழ் பெற்ற வீரர்களாக இருக்கலாம். அல்லது விஷ்ணுமூர்த்தி போன்ற இந்து மதப் பெருங்கடவுளாகவும் இருக்கலாம்.

இத்தகைய தெய்வ வழிபாடுகளில், பகவதி வழிபாடு மிகப் பரவலானதாகும். சிறப்புப் பெற்ற தாகும். இந்தப் பகவதி குறித்து நிகழும் ஆட்டங் களில் நாக வழிபாட்டைப் பார்க்கிறோம்.

'செம் மறத்தி' என்றொரு ஆட்டம் ஆடப்படு கின்றது. இது கணவனோடு உடன்கட்டை யேறிய ஒரு பெண்ணைப் பற்றி நிகழ்கிறது.

ஆட்டங்கள் நிகழ்தல்

இந்தத் திரையாட்டங்கள், நாயர் மற்றும் தீயர் ஆகிய சாதியினரின் பரம்பரை வீடுகளில்தாம் நிகழ்கின்றன.

ஆனால் இந்த வட்டாரங்களில் வாழும் வேலன், பெரு வண்ணான், பெருமலையான், பாணன், மலையன் போன்ற சாதியினரே இந்த ஆட்டங்களை ஆடுகிறார்கள்.

இந்தச் சாதியினர், திராவிட இனக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்பதில் ஐயமில்லை.

வேலன், பாணன் ஆகியோர் சங்கநூல்களில் கூறப்பட்டுள்ளனர். நாயர்களும் தீயர்களும் இந்த ஆட்டங்களை ஆடக் கூடாது.

ஒப்பனை வகை

இந்த ஆட்டத்தில் சிறப்பான தன்மை, ஆட்டக்காரன் அணியும் மிகையான ஆடை அலங்காரங்களேயாகும். ஒவ்வொரு தெய்வத்திற்கும தக்கவாறு ஆட்டக்காரன் ஒப்பனை செய்து கொள்ளுகிறான். இந்த ஒப்பனையைக் 'கோலம்' என்று அழைப்பர்.

ஆட்டக்காரனின் முகத்திலும் உடம்பிலும் அழுத்தமான சிவப்பு, வெள்ளை முதலிய வண்ணங்கள் பூசப்பட்டுப் பயங்கரமாகக் காணப்படுவான். மூங்கிலாலும் தென்னை ஓலையாலும் வெகு உயரமாகச் செய்யப்பட்ட தொப்பி போன்றதை அவன் அணிந்திருப்பான்.

வேலன் இவ்வாறான தலையணியை அணிவதைப் பற்றி அகநானூற்றில் ஒரு பாடல் கூறியுள்ளது.

" அறுவை தோயும் ஒருபெருங் குடுமிச்
சிறுபை நாற்றிய பல்தலை கொடுங்கோல்
ஆகுவது அறியும் முதுவாய், வேலபு!
கூறுக மாதோ, நின் கழங்கின் திட்பம் "

அகநானூறு : 195

இந்த அகநானூற்றுப் பாடலில் வரும் 'ஒரு பெருங்குடுமி' என்பது தற்காலத்தில் வடமலையாள வேலனாட்டக்காரன் அணியும் தலையணியைக் குறிப்பிடுவதைக் காணலாம்.

கோலம் - பெயர் வழக்கு

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார், பலவகையான நாட்டுப்புற நடனங்களைப் பற்றிக் கூறியுள்ளார். கோமாளி, தலைவன், அந்தணன், பறையறிவிப்போன் முதலியோர் அணியும் ஒப்பனையைக் 'கோலம்' என்று அவர் அழைத்துள்ளார்.

கோலம் என்ற சொல் திரையாட்டங்களைக் குறித்து இன்றும் வட மலையாளத்தில் வழங்கி வருவது கவனிக்கத் தக்கதாகும். கோல ஆட்டங் களை ஆடும் நாடான வட மலையாளத்துப் பகுதி யைக் 'கோலத்து நாடு' என்றும் அந்த நாட்டை ஆண்ட நாடாள்வானை 'கோலஸ்திரி ராஜாக்கள்' என்றும் இடைக் காலத்தில் அழைத்ததையும் கவனிக்கவேண்டும்.

களம் - மன்றம்

தெய்வத்தைச் சாந்தி செய்து பூசிப்பதற்குரிய இடத்தைக் களம் என்ற பெயராலே அழைப்பர். வேலன் களம் அமைக்குமிடத்தைப் பற்றித் 'திரு முருகாற்றுப்படை நூல், விவரித்துள்ளது:

"வேலன் றைஇய வெறியயர் களனும்
காடும் காவுங் கவின்பெரு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினுங்"

வட மலையாளத்திலும் வேலன் தெய்யாட்டம் ஆடுவதற்குச்சில குறிப்பிட்ட இடங்களைக் கூறுவது திருமுருகாற்றுப்படையில் கூறியதை ஒத்துள்ளது.

இடைச் சாதியினருக்காகத் தெய்யாட்டம் ஆடும் இடம், களம் அமைக்கும் இடம், மன்னம் (தமிழில் மன்றம்) என்றழைக்கப்படுகிறது.

தீயர்களுக்காகக் களம் அமைக்கும் இடம் கழகம் என்று அழைக்கப்படுகின்றது. களம் அமைக்கும் பிற இடங்கள் தரை, காவு, முண்டியா (புதர்), அறை, துருத்தி (கழிமுகம்) என்றழைக்கப் படுகின்றன.

வட மலையாளத்தில், களம் அமைத்து ஆடு கின்ற சில இனக் குழுக்களில் (Tribals) இந்த ஆய்வுக்கு வேலன்மார், வேலாச்சாரியார் என்பவர் கள்தான் முக்கியமானவர்கள்.

நேரில் கண்ட நிகழ்ச்சி

நான் வடக்கு மலையாளத்தில் பிரெஞ்சுக்காரர் ஆண்ட திட்டுப் பகுதியான மாகி (மாஹே)யின் ஆட்சித் தலைவராக இருந்தபோது, இப்படிப்பட்ட வெறியாட்டத்திற்கு ஏற்பாடு செய்து கவனித்தேன்.

களம் அமைத்துப் பலியிடுவதில் வட மலையாளத்தில் நடக்கும் சடங்கிற்கும் சங்க இலக்கியம் மற்றும் இடைக்கால இலக்கியம் கூறும் களம் அமைக்கும் செய்திகளுக்கும் இடையே இருந்த ஒற்றுமைகளைக் கண்டு வியந்தேன்.

வேலனின் வெறியாட்டத்தைப் பற்றியும் களப் பலி செய்வது பற்றியும் அகநானூறு முதலிய பல சங்க நூல்கள் கூறியுள்ளன. திருமுருகாற்றுப் படையும் விளக்கமாகக் கூறியுள்ளது.

செந்நிற ஆடை, மலர்

வட மலையாளத்தில் வேல்னாட்டக்காரன் முதலில் சிவப்புக்கரையையுடைய வெள்ளாடையை உடுத்திக் கொள்ளுகிறான். இவ் ஆடையைக் 'காணி' என்று அழைப்பர். இவ்வாடையின் மேலே சிவப்பு நிற ஆடையை அவன் அணிகின்றான். இதற்குச் சிவப்பு என்பதே பெயராகும்.

திருமுருகாற்றுப்படையில் முரண்கொள் உருவில் இரண்டு உடுத்தியதாகக் கூறப்பட்டுள்ளதை இது சார்பாக நாம் கவனிக்க வேண்டும்.

திருமுருகாற்றுப்படையில் கையிலே சிவப்பு நிற நூலால் ஆன காப்பு நாண் அணிந்ததைச் 'செந்நூல் யாத்து' என்ற தொடரில் கூறப்பட்டுள்ளது. அதே போன்ற கங்கணத்தை வேலனாட்டக்காரன் அணிகின்றான்.

குறுந்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடலில் முருகன் குன்றிவிதை போன்ற சிவப்பு நிற ஆடையை அணிந்திருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

பரிபாடலில் (19—97) முருகன் அணிந்திருந்த ஆடையும் இடுப்பில் தரித்திருந்த கச்சையும் சிவப்பு நிறம் எனக் கூறப்பட்டுள்ளது. கலித் தொகை 105 ஆம் பாடலிலும் சிவப்பு ஆடை முருக னுக்குப் பொருத்தமானது என்று கூறப் பட்டுள்ளது.

கலித்தொகை 105 ஆவது பாடலிலும் முருக னுக்குப் பாதங்களில் வெண்ணிற ஆடை இருந்ததைச் சிவப்புக் காளை மாட்டினுடைய வெள்ளைக் காலோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள் ளதைக் காணலாம்.

முருகன் சிவப்பு ஆடையை அணிந்ததிலும் வட மலையாள வேலனும் சிவப்பு ஆடையை அணிவதிலும் ஒற்றுமை உள்ளது.

செந்நிற மலர்

வேலன் வெறியாடலில் செந்நிற மலரைப் பயன்படுத்துவதும் முக்கியமான செய்தியாகும். வேலன் சிவந்த செச்சை மலரால் ஆன கண்ணியை அணிந்திருந்ததாகத் திருமுருகாற்றுப்படை நூல் (வரி 208) கூறியுள்ளது.

வெட்சியைத் தாவர நூலில் Ixoracoccinia என்றழைப்பர். செச்சை மலர், வெட்சியில் ஒரு வகையானது. சிவப்பாக உள்ள பூவாகும். இதன் பூவை ஆங்கிலத்தில் Ixoraroses என்றழைப்பர்.

வடமலையாளத்தில் இப்பொழுது வேலன் அமைத்த களத்திலும், திரையாட்டத்திலும், பிற மதச் சடங்குகளிலும் இந்தப் பூ, பரவலாகப் பூசைக் குரிய பூவாகப் பயன்படுத்தப்படுகின்றது. பிரசாத மாக இப் பூ வழங்கப்படுகின்றது. இந்தப் பூவை மலையாளத்தில் 'செக்கி' என்று அழைப்பர்.

இக் காலத்தில் வட மலையாளத்து வேலன், முதலில் மார்பிலும் கைகளிலும் சந்தனம் பூசிக் கொள்கின்றான்.

திருமுருகாற்றுப் படையில் வரும் வேலன், நெய்யொடு ஐயவியைப் பூசிக்கொள்கிறான்.

ஐயவி என்ற வெண்கடுகு, பேயை விரட்டும் சக்தியுடையது என்ற நம்பிக்கை இருந்து வந்தது.

வழிபாட்டு முறை

பின்னர், மலையாளத்து வேலன், தாழ்ந்த குரலில் மந்திரம் கூறுகின்றான். அந்தச் சமயத்தில் விரல்களை மூடிய இரு கரங்களின் கட்டை விரல் களும் அவனுடைய இதயத்தை நோக்கி வளைந் திருக்கும். இவ்வாறு செய்வதை 'ஆத்ம சாட்சி' என்று வடமலையாள வேலன் அழைக்கின்றான்.

இதை 'ஐதுரைத்து குடந்தம்பட்டு' என்று திரு முருகாற்றுப்படை கூறுகின்றது. குடந்தப்பட்டு என்பதற்குக் கூறிய அடிக் குறிப்பில் இதன் விளக்கம் உள்ளது.

நான்கு விரல்களும் மூடியிருக்க வேண்டும். அதேசமயம் கட்டைவிரல்கள் இரண்டும் நெஞ்சை நோக்கி வளைந்திருக்க வேண்டும். இதுவே குடந் தம்பட்டு என்பதை விளக்குவதாகும். இதையே வடமலையாளத்து வேலன் செய்கின்றான். பின்னர் அவன் களத்தில் கொழுமலர் சிதறுகிறான்.

மலர்கள் தூவுதல்

சங்க நூல்களில் வேலன் சமைத்த களத்தில் பல பூக்கள் சிதறப்பட்டதை உவமையாகக் கூறப் பட்டுள்ளன என்பதை நினைவு கூரலாம்.

‘ கேளாய் எல்ல! தோழி! வேலன்
வெறியயர் களத்து சிறுபல தாஅய
விரவுவீ உறைத்த ஈர் நறும் புறவின் ’

— அகநானூறு : 114

‘ அதிர்குரல் முது கலை கறிமுறி முனைஇ
உயர்சிமை நெடுங்கோட்டு உகள உக்க
கமழ்இதழ் அலரி தாஅய் வேலன்
வெறியயர் வியன் களம் கடுக்கும் ’

— அகநானூறு : 182

‘ மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும்
ஆர்கலி விழவுக்களங் கடுப்ப, நாளும்,
விரவுப்பூம் பலியொடு விரைஇ, அன்னை
கடியுடை வியல் நகர்க் காவல் கண்ணி,
முருகு என வேலன் தரூஉம். ’

— அகநானூறு : 232

வடமலையாளத்து இன்றைய வேலனும் களத்தில் மலர்களைத் தூவுகின்றான்.

திருமுருகாற்றுப்படை, வெண்பொரியைக் களத்தில் சிதறுவதைப் பற்றிக் கூறியுள்ளது.

“ எம்மண்ணங் கினவே மகிழ்ந்த முன்றில்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்
செந்நெல் வெண்பொரி சிதறி யன்ன ”

— குறுந்தொகை : 53

குறுந்தொகைப் பாட்டில் புங்கம் பூ மணலில் விழுந்து இருந்தது- வேலன் களத்தில் செந்நெல் வெண்பொரி சிதறியிருந்ததைப் போன்று இருந்த தாக உவமித்துக் கூறப்பட்டுள்ளது.

வாழை மட்டையால் களம் அமைத்தல்

வடமலையாளத்து வேலனும் அரிசி வெண் பொரியைக் களத்தில் தூவுகின்றான். மலை யாளத்து வேலன் வாழைமட்டைகளால் களம் அமைக்கிறான். வாழை மட்டைத்தண்டுகளைத் தரையில் வைத்து சதுர வடிவமாகக்களம் அமைக் கின்றான். இதில் சம அளவுள்ள பன்னிரெண்டு பிரிவுகள் இருக்கும். இதையே களம் என்று அழைக்கின்றான் இக் களத்தில், தான் வேட்கின்ற தெய்வத்திற்கு வேண்டிய பலி பொருள்களை அவன் தூவுகின்றான்.

சங்ககாலத்தில் 'பல்பிரப்பு' என்று களத்தில் உள்ள இப் பிரிவுகள் கூறப்பட்டன.

> ''முரிபுரை யெழினலத் தென்மகள் துயர்மருங்கு
> அரிதல் வேண்டுமெனப் பல்பிரப் பிரீஇ
> அரியா வேலன் தரீஇ அன்னை
> வெறியயர் வியன்களம் பொலிய ஏத்தி
> மறியுயிர் வழங்கா அளவை சென்றியாம்''
>
> அகநானூறு : 242

சூர்உறை வெற்பன் மார்புஉறத் தணிதல்
அறிந்தனள் அல்லள், அன்னை; வார்கோல்
செறிந்திலங்கு எல்வளை நெகிழ்ந்தமை நோக்கிக்
கையறு நெஞ்சினள் வினவலின், முதுவாய்ப்
பொய்வல் பெண்டிர் பிரப்புஉளர் புரீஇ
'முருகன் ஆர் அணங் குன்றலின், அது செத்து,
ஓவத் தன்ன வினைபுனை நல் இல்,
'பாவை அன்ன பலர் ஆய் மாண்கவின்
பண்டையின் சிறக்க என் மகட்கு'எனப் பரைஇக்
கூடுகொள் இன்னியங் கறங்கக் களன் இழைத்து
ஆடணி அயர்ந்த அகன்பெரும் பந்தர்,
வெண்போழ் கடம்பொடு சூடி இன்சீர்
ஐதுஅமை பாணி இரீஇக் கை பெயராச்
செல்வன் பெரும்பெயர் ஏத்தி, வேலன்
வெறிஅயர் வியன்களம் பொற்ப, வல்லோன்

அகநானூறு : 98

'மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்
செல்லாற்றுக் கவலை பல்லியங் கறங்க'

குறுந்தொகை : 263

பிரப்பு - பொருள் யாது?

'பிரப்பு என்பதற்கு தானியங்களைப் பலியாக வைத்தல்' என்று உ.வே.சாமிநாதய்யர் உரை கூறியுள்ளார். பிரப்பு என்பது அரிசி, தினை முதலியவற்றைப் பல பகுதியாகக் கூடையிலாதல், முறத்திலாதல் பலியாக இட்டு வைத்தல் என்றும் உரை கூறப்பட்டுள்ளது.

குருதியொடு விரைஇய தூவெள்ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்'

திருமுருகாற்றுப்படை, வரிகள் : 233-234.

பிரப்பு என்பதற்குச் சரியான பொருளை உரையாசிரியர்கள் கூறவில்லை.

திருமுருகாற்றுப்படையில் 'குருதியொடு கலந்த தூய வெள்ளரிசையைச் சிறுபலிச் செய்து பல பிரப்பில் பரப்பி என்று கூறப்பட்டுள்ளது. பிரப்புக் கூடை என்பாருமுளர்' என்றும் கூறப்பட்டுள்ளது.

பிரம்பினால் ஆன களம்

பிரப்பு என்பது பிரம்பால் ஆன களமாகும். சங்க காலத்தில் பிரம்பினால் களம் அமைத்து

அதில் பிரிவுகள் ஏற்படுத்தி, அப் பிரிவுகளில் பலிப் பொருளைத் தூவினார்கள். பல்பிரப்பிரீஇ என்று கூறியது பல பிரம்புப் பிரிவுகளில் தூவி என்பதைக் குறித்ததாகும்.

இந்தப் பல்பிரப்பு எனும் பிரிவுகள், அறுபத்து நான்கு என்றும் அறுபத்து நான்கு கூடைகள் என்றும் சில உரையாசிரியர்கள் பொருள் கூறினர்.

வடமலையாள வேலன் இப்பொழுது செய்யும் களத்தில் பன்னிரெண்டு பிரிவுகள் உள்ளன.

களத்தை சதுரமாகவோ, நீண்ட சதுரமாகவோ, வட்டமாகவோ அமைக்கலாம். இதை 'யந்திரம்' என்று இக்கால வட மலையாளத்து வேலன் அழைக்கின்றான். கணபதி முதலிய பல்வேறு தெய்வங்களுக்கு வெவ்வேறு விதமான இயந் திரங்கள் அமைக்கப்படுகின்றன.

இயந்திரம் வரைந்து வழிபடும் இக்கால வழக்கம், பண்டைக் காலத்துப் பூசாரிகள் வைத்த பிரம்புக் களத்திலிருந்து தோன்றியிருக்கலாம்.

பலி தரல்

வட மலையாளத்து வேலன், மந்திரம் கூறிச் சேவல் ஒன்றை முருகனுக்குப் பலியிடுகின்றான். சங்க காலத்தில் ஆட்டைப் பலியிட்டனர்.

" கூறாய், செய்வது தோழி! வேறுணர்ந்து
அன்னையும் பொருளுகுத்து அலமரும்; மென்முறிச்
சிறுகுளகு அருந்து, தாஅய் முலை பெறாஅ,
மறிகொலைப் படுத்தல் வேண்டி, வெறிபுரி
ஏதில் வேலன் கோதை துயல்வரத்
தூங்கும் ஆயின், அதூஉம் நாணுவல் "

அகநானூறு : 292

" முருகயர்ந்து வந்த முதுவாய் வேல
சினவ வோம்புமதி வினவுவ துடையேன்
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவண் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தி யாயின் வணங்கிய
விண்டோய் மாமலை சிலம்பன்
ஒண்டார் அகலமும் முண்ணுமோ பலியே "

குறுந்தொகை : 362

மேலே காட்டிய பாடல்களில் கூறப்பட்டது போலத் திருமுருகாற்றுப்படையும் ''சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து'' என்று கூறியுள்ளது.

குரிசி - குருதி

வட மலையாளத்து வேலன், சேவலைப் பலியிடும் முன், அதன் காதில் மந்திரம் ஓதுகின்றான். சேவலின் கழுத்தைக் கத்தியால் அறுத்து, நீர் நிறைந்த பாத்திரம் ஒன்றில் இரத்தத்தை வடிக்கின்றான்.

அதற்குப் பிறகு முக்கியமான சடங்கான 'குரிசி' என்பதை நடத்துகின்றான். இரத்தம் சொட்டிய நீரைக் கையால் கலக்குகின்றான். காப்பரிசி, பொரி, செக்கி மலர், மல்லிகைப் பூ ஆகியவற்றை இரத்தத்தில் கலந்து சிவப்பாகும்படி செய்கின்றான். இந்தக் கலவையைக் குரிசி என்றழைக்கின்றான்.

இந்தப் புனித குரிசியை வேலன் மந்திரம் ஓதிக்கொண்டு களத்தின் மீது தெளிக்கின்றான்.

குரிசி என்ற மலையாளச் சொல், குருதி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும்.

ஆட்டுக்குட்டியின் இரத்தத்தொடு தினையைக் கலந்து அக் கலவையைக் களத்தின் பிரிவுகளில் தெளிக்கப்பட்டதாகச் சங்கப் பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

திருமுருகாற்றுப்படையில் தினைக்குப் பதிலாக, அரிசி இரத்தத்தில் கலக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

தோற்றம் — வாழ்த்து!

"தோற்றமல்லது நோய்க்கு மருந்தாகா
வேற்றுப் பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்தி"

எனும் குறுந்தொகை 263ஆம் பாடலில், வேலன் பல்வேறு தெய்வங்களைக் குறிப்பிட்டு, வாழ்த்துப் பாடி வேட்டதையும் நோய்வாய்ப்பட்ட தலைவியின் நோயைத் தீர்க்க வெறியாட்டயர்ந்ததையும் கூறியுள்ளது. இந்த வாழ்த்துப்பாடல், தோற்றம் என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமலையாளத்தில் தெய்வாட்டத்தின் போது குறிப்பிட்ட தெய்வ ஆவேசமேறி, அத் தெய்வத்தின் தோற்றத்தையும் அதன் வரலாற்றுக் கதையையும் கூறி, வேலன் பாடுகிறான். அதற்கு இக் காலத்திலும் 'தோற்றம்' என்ற பெயரே மலையாளத்தில் வழங்குகின்றது. மலையாளத்து வேலன் சங்ககால வேலனின் எச்சமாக உள்ளான் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

களத்தைச் சுற்றி, செவ்வலரி மலர்கள் ஒரே அளவாகத் தொடுக்கப்பட்டுத் தொங்கவிடப்பட்டிருக்கும் என்று திருமுருகாற்றுப்படை கூறியுள்ளது. இன்றும் வடமலையாள கள வழிபாட்டில் இந்த மலர் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. மாலைகளிலும் களத்தைச் சுற்றித் தொங்கவிடப்பட்டிருக்கும் தோரணங்களிலும் இந்த மலரைக் காணலாம்.

கல்லாடம் காட்டும் சடங்கு

பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல் லாடம் என்ற நூல், வேலனாட்டச் சடங்கை (25.1.16) விவரித்துள்ளது.

உறவினர் கூடியிருக்கும் முற்றத்தில் முருகனது பஞ்சைக் கொடி நடப்பட்டது.

தரையெங்கும் வெட்சிமலர்கள் பரப்பப்பட்டன.

தேக்கிலைகளில் இரத்தம் கலந்த தினைமாவு படைக்கப்பட்டது.

நான்கு திசைகளை நோக்கி இவ் இலைகள் வைக்கப்பட்டன.

ஆட்டுக் குட்டியைப் பலியிடுகிறான்.

ஈச்ச இலையால் வடிகட்டின கள்ளை வேலன் குடிக்கின்றான்.

கல்லாடத்தில் கூறப்படும் செய்திகளில் முக்கிய மானது, இந்த 'வேலனாட்டம் கடமலை

நாட்டிலே நடந்தது' எனக் கூறப்படும் குறிப்பாகும். பத்தாவது நூற்றாண்டுக்குப் பிற்பட்ட கல்வெட்டு களில், கேரளம் இப் பெயராலேயே அழைக்கப் பட்டது.

கடம்ப மலர்கள், சந்தனம், மஞ்சள் ஆகியவை வேலனது வெறியாட்டில் பயன்படுத்தப்பட்டதைத் திருமுருகாற்றுப்படை கூறியுள்ளது. இவற்றில் கடம்ப மலரைத் தவிர மற்றவைகளை வட மலை யாளத்து வேலன் பயன்படுத்துகின்றான்.

பரிபாடலில் வேலன் வழிபாட்டைப் பற்றி ஒரே ஒரு செய்தி மட்டும் வருகின்றது.

'காஅய் கடவுள் சேஅய்! செவ்வேள்!
சால்வ! தலைவ எனப் பேஎ விழவினுள்,'
வேலன் ஏத்தும் வெறியும் உளவே.
அவை வாயு மல்ல, பொய்யு மல்ல,
நீயே வரம்பிற்று இவ் வுலகம் ஆதலின்
சிறப்போய் சிறப்பின்றிப் பெயர்குவை,
சிறப்பினுள் உயர்வுஆகலும்
பிறப்பினுள் இழிபுஆகலும்
ஏனோர் நின் வலத்தினதே.'

பரிபாடல்-5-வரி : 13-21

இழிந்த வழிபாடு எனல்!

மேற்காட்டிய பரிபாடல் வரிகளில் வேலனு டைய வெறியாடல் பொய்யுமல்ல; ஆயினும் அதில் முருகன் வெளிப்படுதலால் அவ் வெறியாடல் பொய்யுமல்ல என்று கூறப்பட்டுள்ளது.

'பேஎ விழவு' என்று தாழ்த்திக் கூறப்பட்டு, அவனேத்தும் ஆடல் மெய்யல்ல என்று கூறப்பட்டுள்ளது.

'அவற்றுள் ஒன்றாய் வழி அத் தலைமைச் சிறப்பினையுடைய நீ அச் சிறப்பின்றி ஒழிகுவை' என்று பரிபாடல் உரையில் கூறப்பட்டுள்ளது.

வேலன் வழிபாடு, இழிந்த வழிபாடு என்று பரிபாடலில் கருதப்பட்டது என்பது உண்மையாகும்.

பரிபாடலில், வேத வழக்கோடு ஒட்டிய வழிபாடே போற்றப்பட்டது. திருமுருகாற்றுப் படையில் கூறியது போல, வேலன் வழிபாடு பரிபாடலில் விதந்து கூறப்படவில்லை. 'பேஎ விழவினும்' என்ற வழக்கே, வேலன் வழிபாட்டை இழிவாகக் கருதினதைக் காட்டுகின்றது.

வேலன் வழிபடும் முருகனாகவும் திருவேரகத்தில் அந்தணர் வழிபடும் முருகனாகவும் திருமுருகாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளான். பரிபாடலில் வைதீக வழிபாடே பெரும்பாலும் கூறப்பட்டுள்ளது. வேலன் வழிபாடு விளக்கமாகக் கூறப்படவில்லை.

காலமும் கருத்தும்

பிற்பட்ட காலம்

திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு தோன்றிய நூல்களாகும்; சங்ககால நூல்களில்லை.

திருமுருகாற்றுப்படை கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு பிற்பட்டது என்பதற்கு அகச்சான்று உள்ளது.

குன்றுதோறாடலில் வேலன் பச்சிலைக் கொடியொடு நறைக்காயை அணிந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

நறைக்காய் என்புது சாதிக்காயாகும். சாதிக்காய் இந்தியாவிற்கு, கி. பி ஆறாம் நூற்றாண்டில் தான் மலேசியாவிலிருந்து கொண்டுவரப்பட்டுப் பயிராக்கப்பட்டது. இதைத் தாவர இயலார் (Botanists) ஐயந்திரிபறக் கூறியுள்ளனர். ஆதலின் திருமுருகாற்றுப்படையின் காலம் கி. பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாக இருக்க வேண்டும்.

அக்கினியைப் பற்றிய கதை

திருமுருகாற்றுப்படையிலும் பரி பாடலிலும் விளக்கப்படும் வைதீக முருகன், மகா பாரதத்தில்

இருந்தும்; இராமாயணத்திலிருந்தும், குமார சம்பவத்திலிருந்தும் படைக்கப்பட்ட முருகனாகும்.

தேவர்களும் தானவர்களும் (அசுரர்) போர் புரிந்து கொண்டிருக்கும்போது தேவர்கள் தோல்வி யுற்று வந்தார்கள்.

தேவர்களின் சேனாதிபதியான இந்திரன் ஒரு நாள் தேவசேனை என்ற அழகிய மங்கையைத் தைத்திரியர் என்பவர்களிடமிருந்து காப் பாற்றினான்.

தான் பிரஜாபதியின் மகள் என்றும், அவளுடைய சகோதரியை அவன் காதலித்த 'கேனி' என்ற அசுரன் தூக்கிச் சென்று விட்டான் என்றும், தனக்கு ஒரு நல்ல கணவனைத் தேடித் தரவேண்டும் என்றும் அவள் கேட்டுக் கொள்கிறாள்.

அக்கினியும் சோமனும் தேவசேனைக்கு ஒரு பொருத்தமான கணவனை உண்டுபண்ணுவார்கள் என்று இந்திரன் நினைத்தான். பிரம்மாவினோடு இந்திரனும் தேவர்களும் ஏழு ரிஷிகளின் வீட்டிற்குச் சென்று சோம பானத்தைப் பருகினார்கள்.

சோம பானத்தை வேள்வித் தீயில் சொரிந்து பலியிட்டபோது, அக்கினி தேவன் ரிஷிபத்தினி களைக் கண்டதும் காமுற்று, அவர்களைத் தீண்ட முயன்றான். அவர்கள் அக்கினியை மதிக்காது போய் விடவே, அக்கினி ஏமாந்து சென்று விடு கின்றான்.

சுவாக - தந்திரம்

ஆனால், சுவாகா என்பவள் அக்கினியின் மேல் காதல் கொண்டு, அவனுடைய ஆசையை நிறைவேற்றும் வண்ணம், அக்கினியிடம் ரிஷிபத்தினிகள் தனித்தனியே வந்து ஆசையைத் தணிப்பார்கள் என்று கூறுகின்றாள்.

சுவாகா, தன்னுடைய சாமர்த்தியத்தினால் ஒவ்வொரு ரிஷிபத்தினிகளுடைய உருவம் கொண்டு மாறி வந்து அக்கினியுடன் சேருகின்றாள்.

ஆனால் வசிஷ்டருடைய மனைவியான அருந்ததியின் உருவத்தைச் சுவாகாவால் எடுக்க முடியவில்லை.

ஆறுமுகன் தோன்றினான்

அக்கினியுடன் ஒவ்வொரு சேர்க்கைக்குப்பின்னும் சுவாகா, அக்னியின் விந்துவை கருடப் பறவை உருவில் எடுத்துச் சென்று சுவேத மலையில் ஒரு பொன்னாலான பாத்திரத்தில், சரவணத்தில் புல் நிறைந்த இடத்தில் வைக்கின்றாள். அங்கு குமரன் ஆறுதலைகளுடன் பன்னிரண்டு கைகளுடன் பிறந்தான். அந்த ஆறு தலைகளில் ஒருதலையானது ஆட்டுத் தலையாக இருந்தது.

பிறந்த ஆறே நாட்களில் ஸ்கந்தன் போர் புரியும் வல்லமை பெற்றான். நான்கு நாட்களில் கதிரவனுடைய ஒளிமயமாய் மாறிக் கர்ஜனைகள் புரிந்து, அம்புகளைச் சுவேத குன்றிலிருந்து கிரௌஞ்சகிரி மீது எறிகின்றான்.

தேவர்களின் சூட்சி

ஸ்கந்தனுடைய வீரதீரச் செயல்களைக் கேள்வி யுற்றுத் தேவர்கள் பயப்பட்டு இந்திரனிடம் முறை யிடுகிறார்கள். இந்திரன், 'ஒரு குழந்தையுடன் போர் புரிய மாட்டேன்' என்று மறுக்கின்றான்.

தேவர்கள் துர்த்தேவதைகளையும் நோய் உண் டாக்கும் தேவதைகளையும் ஸ்கந்தனைக் கொல்ல அனுப்புகின்றார்கள். ஆனால் அவர்கள் ஸ்கந்த னைத் தங்களுடைய குழந்தையாகக் கருதிக் காப் பாற்றினார்கள்.

இந்திரன் போர் புரிதல்

தேவர்கள், இந்திரன் தலைமையில் ஸ்கந்த னுடன் போரிட வருகின்றார்கள்.

ஆனால் ஸ்கந்தன் இந்திரனுடைய படையைத் தனது வாய் வழியால் தீயை ஊதி முறியடிக் கின்றான்.

இந்திரன் கடைசியாகத் தன்னுடைய வலிமை மிக்க ஆயுதமான, இடியைத்தாக்குதலுக்குரிய வஜ்ர ஆயுதத்தை ஸ்கந்தன் மேல் எறிகின்றான். அது ஸ்கந்தனுடை உடலில் வலது பகுதியில் சிறிது பிளக்கிறது.

பிளந்த பகுதியில் விசாகன் என்ற தெய்வம், சக்தி ஆயுதம் தரித்துத் தோன்றுகின்றான். அதை பார்த்து இந்திரன் நடுங்கிச் சரணாகதி அடைகின்றான்.

தேவர்கள் ஸ்கந்தனை 'இந்திரன்' ஆகும்படி கேட்டுக் கொள்கிறார்கள். ஸ்கந்தன் மறுக்கின்றான்.

தேவர்கள் படையின் தளபதியாக ஏற்றுக் கொண்டு தேவசேனையை மணக்கின்றான்.

இலக்குமி வணங்குதல்

லட்சுமி தேவி, ஸ்கந்தனை சேவித்து பொன் அணிகலன்களை அணிவிக்கின்றாள். லட்சுமிதேவி தொழுவதிலிருந்து, ஸ்கந்தன் எவ்வளவு தூரம் உயர்த்தப்பட்டான், சிறப்படைந்தான் என்பது தெரிகின்றது.

அடுத்து, ருத்திரன் பார்வதியோடு ஸ்கந்தனைக் கண்டு சிறப்புச் செய்கிறான்.

பாரதம் கூறும் முருகன்

மகாபாரதம் இவ்விடத்தில், அக்கினியை ருத்திரனென்றும் சுவாகாவே உமை என்றும் கூறுகின்றது ருத்திரனுடைய விந்துவே அக்கினியின் மேல் விழுந்து சுவேதமலையில் கார்த்திகைப் பெண்களால் ஸ்கந்தனாக பிறந்தான் என்று அக்கதை கூறுகின்றது. இவ்வாறாக ஸ்கந்தன் ருத்திர சிவனின் குமாரனாக மாறுகின்றான.

பரிபாடலில் முருகன் தோற்றத்தைப் பற்றி வரும் கதை, மகாபாரதத்துக் கதைகளில் ஒன்றை ஒட்டியே வருகின்றது.

'மாதிரம் அழல, எய்து அமரர் வேள்விப்
பாகம் உண்ட பைங் கட் பார்ப்பான்
உமையொடு புணர்ந்து, காம வதுவையுள்,
அமையாப் புணர்ச்சி அமைய, நெற்றி
இமையா நாட்டத்து ஒருவரங் கொண்டு,
'விலங்கு' என விண்ணோர் வேள்வி முதல்வன்
விரிகதிர் மணிப் பூணவர்க்குத் தான் ஈத்தது
அரிதென மாற்றான், வாய்மையன் ஆதலின்
எரி கனன்று ஆனாக் குடாரிகொண்டு அவனுருவு
திரித்திட் டோன், இவ் வுலகுஏழும் அருளக்
கருப்பெற்றுக் கொண்டோர், கழிந்தசேய் யாக்கை
நொசிப்பின் ஏழ்உறு முனிவர், நனியுணர்ந்து,
வசித்ததைக் கண்டம் ஆக மாதவர்,
'மனைவியர்' நிறைவயின், வசிதடி சமைப்பின்,
சாலார்; தானே தரிக்கஎன, அவர்அவி
உடன்பெய் தோரே, அழல்வேட்டு; அவ்அவித்
தடவுநிமிர் முத்தீப் பேணிய மன் எச்சில்,
வடவயின், விளங்குஆல் உறைஎழு மகளிருள்
கடவுள் ஒருமீன் சாலினி ஒழிய,
அறுவர் மற்றையோரும் அந்நிலை அயின்றனர்:
மறுஅறு கற்பின் மாதவர் மனைவியர்
நிறைவயின் வழாஅது நிற்சூலினரே;
நிவந்துஓங்கு இமயத்து நீலப்பைஞ் சுனைப்
பயந்தோர் என்ப, பதுமத்துப பாயல்:
பெரும்பெயர் முருக! நிற் பயந்த ஞான்றே'

பரிபாடல் : 5:26-50

பரிபாடலில் குறிப்பிடும் முருகன் பிறப்புக்கதை, மகாபாரதத்தில் காணப்படும் முதற்கதையொடு பிற கதைகளைக் கலந்து புனைந்த கதையாகத் தெரிகின்றது. மகா பாரத முதற் கதையில் அக்கினியே முருகனின் தகப்பனாகக் குறிக்கப்படுகின்றான். ஆனால் அந்தக் கதையிலேயே அக்கினி ருத்திரனாகவும், சுவாகா உமாவாகவும், இறுதியில் கூறப்படுகின்றார்கள்.

சிவன் ஈன்ற ஸ்கந்தன்

பின்னர் வரும் மகாபாரதக் கதையில், சிவனுடைய விந்துவிலிருந்தே ஸ்கந்தனாகிய முருகன் தோன்றியதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இந்திரன் சிவனிடம் தன் விந்துவில் தோன்றிய கருவை அழிப்பதாக வரத்தைக் கொடுத்தான் என்றோ அக்கருவைப் பல (துண்டங்களாகக்) கண்டமாகச் சேதித்தான் என்றோ வரும் கதை மகாபாரதத்தில் கூறப்படவில்லை. அங்ஙனம் சேதித்தலாற் கழிந்த சேயாக்குதற்கு உரிய கருவை,

> 'இஃது, அமரர் சேனைக்குத் தலைவனாம் எனச் சமாதியானுணர்ந்து, இந்திரனுக்கிரதம் வாராமை கூறி, அவன பககலில் பெற்றுக் கொண்டு போன தெய்வ முனிவர் எழுவரும் இறைவன்கண்டமாகவசித்ததாகியவசிதடியை, தன் மனைவியர் தரித்துச் சமைவிப்பராயின் நிறைவயிற் சாலார். அதனால் அங்கியில்

தானே தரிக்கவெண்ணி, அம் மாதவர் அழலை வேட்டு, அதன்கண் அவியுடனே பெய்தார். பெய்ய, அவ் வவியோடு குண்டங்களில் நிமிர்ந்த முத் தீக் கொள்ளுதலால், புரோடசமாகிய அதனை வானத்து வடவயினுறைகின்ற மகளிருட் எழுவருட் கடவுட் கற்பினையுடைய ஒரு மீனாகிய அருந்ததியொழிய விளங்குகின்ற கார்த்திியையாகிய அறுவரும் அப்பொழுதே அயின்றார்'

என்று பரிமேலழகர் உரை கூறியுள்ளார்.

சிவன் தன் விந்துக்கருவை மழுவால் சேதிப்பதற்கு வரங் கொடுத்தான் என்ற கதையும், அவ்வாறு சேதித்ததை ரிஷிகள் தம் மனைவியருக்குக் கொடுத்தால், தரித்துச் சூலுறமாட்டார்கள் என்று அக்கினியிலே ஓம குண்டத்தில் போட்டு எடுத்து, ரிஷிபத்தினிகளிடம் கொடுக்க, அவர்கள் அதனை உண்டு சூலுற்றனர் என்று கூறப்பட்டுள்ள கதையும் மகாபாரதத்தில் இல்லை.

வடநாட்டுக் கதைகளில்

ஆனால் பரிமேலழகர், 'இக் கதையைப் பௌராணிகர் சொல்வர்' என்று கூறியதால், வடமொழியில் ஸ்கந்தனைக் குறிப்பிடும் புராணங்களிலிருந்து இக் கதை எடுக்கப்பட்டதாகக் கருதவேண்டும்.

மற்றும் ஸ்கந்தனாகிய முருகன் பிறப்பதற்கு அக்கினியைச் சம்பந்தப்படுத்திக் கூறும் கதைகள் மகாபாரதத்தில் வருகின்றன.

அக்கினியே ஸ்கந்தனின் தகப்பனாகவும் ஒரு கதையில் கூறப்படுகின்றான். ஆதலின் அக்கினியின் மகன் ஸ்கந்தன் என்பது மறுக்கப்படவில்லை.

பரிபாடல் கூறும் சிறிது மாறுபட்ட இக் கதை, வேறொரு வடமொழி நூலிலிருந்து எடுத் திருக்கலாம்.

இதே கதையைத் திருமுருகாற்றுப்படையில் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். திருமுருகாற்றுப் படை 'அறு வேறு வகையில் அஞ்சுவரமண்டி அவுணர் நல்வயமடங்க' என்ற வரிக்கு (57—58) விளக்கம் கூறுங்கால், 'ஆறுவேறுபட்ட கூற்றாலே' என்று கொண்டு பின் வரும் கதையைக் கூறி யுள்ளார்.

ஒரு எடுத்துக் காட்டு

"இறைவன் உமையை வதுவை செய்து கொண்ட நாளிலே, இந்திரன் சென்று, 'நீ புணர்ச்சி தவிர வேண்டும்' என்று வேண்டிக் கொள்ள, அவனும் அதற்கு உடன்பட்டு, அது தப்பானாகிப் புணர்ச்சி தவிர்ந்து, கருப்பத்தை இந்திரன் கையிற் கொடுப்ப, அதனை இருடிகள் உணர்ந்து, அவன் பக்கனின்று வாங்கித் தமக்குத்தரித்தல் அரிதாகையினாலே,

இறைவன் கூறாகிய முத் தீக்கட் பெய்து, அதனைத் தன் மனைவியர் கையிற் கொடுப்ப, அருந்ததி யொழிந்த அறுவரும் வாங்கிக் கொண்டு விழுங்கிச் சூன் முதிர்ந்து சரவணப் பொய்கையிற் பதுமப் பாயலிற் பயந்தாராக,

''அது ஆறு கூறாக வளர்கின்ற காலத்து, இந்திரன், தான் இருடிகளுக்குக் கொடுத்த நிலையை மறந்து, ஆண்டு வந்து வச்சிரத்தான் எறிய, அவ் வாறு வடிவும் ஒன்றாய் அவ னுடனே பொறாது, அவனைக் கெடுத்துப் பின் சூரபன்மாவைக் கொல்லுவதற்கு ஆறா கிய வேறுபட்ட கூற்றாலே மண்டிச் சென்ற தென்று புராணங் கூறிற்று.

''இதனைப் பாயிரும் பனிக்கடல் (பரி. சூ) என்று பரிபாட்டானுணர்க. இவ்வாறன்றி வேறுவேறு புராணங் கூறுவாருமுளர்.''

சூரபன்மன் கதை

இந்தக் கதை, வடமொழி நூல்களில் காணப் படும் கதையை ஒத்துப்போயினும், சூரபன்மாவைக் கொல்லுவதற்கு எடுத்த ஆறாகிய வேறுபட்ட உருவம் என்பது, தமிழில் சேர்த்துக் கொண்ட புராணக் கதையாக உள்ளது.

ஏனெனில், சூரபன்மாக் கதை வடமொழியில், மகாபாரதத்திலோ இராமாயணத்திலோ இல்லை.

ஸ்கந்தன் தலைமை

ஆறு நாள் வளர்ச்சி

மகாபாரதத்தில் சல்யாபர்வத்தில், ஸ்கந்தனின் பிறப்பிலிருந்து, ஆறு நாட்களின் வளர்ச்சி கூறப்பட்டுள்ளது.

முதல் நாள், கருவில் உருவாகின்றான்.

இரண்டாம் நாள், எல்லோருக்கும் தெரியும்படி தோன்றுகின்றான்.

மூன்றாம் நாள், குழந்தையாகின்றான்.

நான்காம் நாள், அங்கங்கள் வளர்ந்து குமரனாகத் தோன்றி, சேனாபதியாக மாறுகின்றான்.

ஐந்தாம் நாள், சிவனுடைய வில்லை யெடுத்து, தேவர்கள் தொழ, வீரச் செயல் புரிகின்றான்.

ஆறாவது நாள், சக்தி என்ற வேலாயு தத்தை எடுத்துக் கர்ஜனை செய்து, கிரௌஞ்ச மலையையே வீசிப் பிளக்கின்றான்.

இந்த ஆறாம் நாள் 'சஸ்தி' (சஷ்டி) என்று இன்றும் புனிதமான நாளாகக் கருதப்படு கின்றது.

சிவனின் மகன்

மகாபாரதத்தில் பின்னால் வரும் ஒரு கதை யில், சிவபெருமான் ஸ்கந்தனுக்கு நேரில் தகப்ப னாகின்றான்.

சிவபெருமானின் விந்து அக்கினியில் விழு கின்றது. அதைத் தாங்க முடியாமல் அக்கினி கங்கை நதியில் போட்டு விடுகின்றது. அங்கு ஆறு கார்த்திகை மாதர்களும் பாலூட்டி வளர்க்கின் றார்கள். கங்கையும் பிரகஸ்பதியும் பிறப்புச் சடங்குகள் நடத்துகின்றனர்.

ருத்திரனும் உமையும், அக்கினியும் கங்கையும், பிரமனிடம் ஸ்கந்தனைச் சேனாதிபதியாக்கும்படிச் சொல்கிறார்கள்.

பெற்றவர் எத்தனை பேர்!

உருத்திரனும் பார்வதியும் அக்கினியும் கங்கை யும் ஸ்கந்தனுக்கு முன் தோன்றித், தாங்கள்தான் தாய் தந்தையர் என்று கூறுகின்றார்கள்.

ஸ்கந்தன்

'சாகா',

'விசாகா'

'நைகமேயா',

'ஸ்கந்தா'

என்ற நான்கு உருவங்களைத் தரிக்கிறான்.

ஸ்கந்தன் ருத்திரனை அடைகின்றான்.

விசாகன் பார்வதியை அடைகின்றான்.

நைமேயன் அக்கினியை அடைகின்றான்.

சாகா கங்கையை அடைகின்றான்.

போரும் பரிசும்

அடுத்து ஸ்கந்தன், தாரகன் தலைமையில் வந்த மகிஷனையும் மற்றைய அவுணர்கள் எல்லாரையும் அழிக்கின்றான்.

பாணாசுரன், கிரௌஞ்ச மலையில் புகுந்திருந்தான். அவனை ஸ்கந்தன் அம்புஎய்து கொன்றான்.

தேவர்கள் ஸ்கந்தனுக்குப் பல பொருள்களைப் பரிசாகக் கொடுத்தார்கள்.

இந்திரன் அம்பையும் கொடியையும் கொடுத்தான்.

சிவன் 30,000 போர்வீரர்களைக்கொடுத்தான்.

விஷ்ணு ஒரு மாலையையும் உமா ஒரு துணியையும் கொடுத்தார்கள்.

கங்கை அமுத கலசத்தைக் கொடுத்தாள்.

கருடன் தன்னுடைய மகனான மயிலைக் கொடுத்தான்.

வருணன் பாம்பைக் கொடுத்தான்.

அருணன் சேவலைக் கொடுத்தான்.

பிரமன் கருமான் தோலைக் கொடுத்தான்.

எல்லாத் தேவரும்ஸ்கந்தனைப் புகழ்ந்தார்கள்.

வேறொரு கதை

மகாபாரதத்தில் பதின்மூன்றாவது புத்தகத்தில் ஸ்கந்தனுடைய பிறப்பைப் பற்றி வேறொரு கதை கூறப்பட்டுள்ளது.

சிவனும் பார்வதியும் சல்லாபம் செய்து கொண்டிருந்தார்கள். தாரகனான அசுரன், தேவர்களைத் துன்புறுத்தி வந்தான். தேவர்கள், கார்த்திகை மாதர்களைச் சிவனுடைய ஆறு வித்துவை வளர்க்கக் கேட்டுக் கொண்டனர்.

கார்த்திகை மாதர்கள் அவனை வளர்த்ததால் கார்த்திகேயன் என்றழைக்கப்பட்டான்.

சிவனின் சிந்தின விந்துவிலிருந்து பிறந்ததால் ஸ்கந்தன் என்றழைக்கப்பட்டான்.

சரவணப் பொய்கையில் மறைத்து வளர்க்கப் பட்டதால், குகன் என்றழைக்கப்பட்டான்.

பிறகு அவன் சேனைத் தலைவனாகின்றான். ஒவ்வொரு தெய்வமும் பரிசுப் பொருள்களைத் தருகின்றார்கள்.

பின்னர் ஸ்கந்தன், சக்தி ஆயுதத்தைக் கொண்டு தாரகாசுரனைக் கொல்லுகின்றான்.

வால்மீகி கூற்று

வால்மீகி இராமாயணத்தில் ஸ்கந்தனுடைய பிறப்பு வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது.

இமவான் தன்னுடைய மகளான உமாவை ருத்திரனுக்குத் திருமணம் செய்து வைக்கிறான். நூறாண்டு வரை அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறக்கவில்லை.

ருத்திரனுக்குக் குழந்தை பிறந்தால், அவன் எல்லாரையும் மிஞ்சி விடுவான் என்று கருதி, தேவர்கள் ருத்திரனிடம் 'மகனைப் பெற வேண்டாம்' என்று கேட்டுக் கொள்கிறார்கள். அதற்குச் சம்மதிக்கின்றான்.

அதே சமயம் ருத்திரனுடைய விந்து, சிதறித் தரையில் விழுகின்றது. தரைத் தெய்வம் மட்டும் தான் அதைத் தரிசிக்க முடியும்.

தேவர்களுடைய வேண்டுகோள்படி அக்கினியும் வாயுவும் விந்துவில் புகுந்ததும், அது சுவேத மலை யாகின்றது. அந்த மலையில், சரவணத்தில் குமரன் பிறக்கின்றான். இதை அறிந்த உமாதேவி, தேவர் களுக்கு மனைவிமார் மூலம் மகன்கள் பிறக்கக் கூடாது என்று சாபமிடுகின்றாள். தரைத் தெய்வத் தையும் பலரின் மனைவியாக வாழும்படி சாபம் தருகின்றாள்.

தேவர் தானைத் தலைவன்

இராமாயணத்திலே அடுத்த அத்யாயத்தில் இக்கதை வேறுவிதமாக மாற்றிச் சொல்லப்பட்டிருக் கின்றது.

ருத்திரன் தவம் (தபசு) செய்யச் சென்று விட்டான். தேவர்களுக்கு ஒரு சேனாதிபதி வேண்டியிருந்தது. தேவர்களுடைய வேண்டு கோளின்படி, அக்கினி விந்துவை எடுத்துக் கங்கை யிடம் தருகிறான். ஆனால் அவளால் அந்த விந்துவைத் தரிக்க முடியவில்லை.

அது பொன்னால் ஆன வெள்ளம் போல மாறி, மரஞ் செடி கொடி எல்லாவற்றையும் பொன்மய மாக்குகின்றது.

அதன் சூட்டால் உலோகங்கள் தோன்றுகின்றன.

பொன்னாலான தாமரைக் காட்டில் குமரன் பிறக்கிறான். கார்த்தியைப் பெண்டிர் பாலூட்டுகிறார்கள். கடைசியாய் தைத்தியர்களாகிய (தைத்திரியர்) அவுணர்களைக் குமரன் வெல்கின்றான்.

புதுக் கதை

மன்மதன் கதை

குமாரசம்பவம் என்னும் ஸ்கந்தன் பிறப்புக் கதை கூறப்பட்டுள்ளது.

சிவன் இமாலய மலையில் தவம் செய்கின்றான். இமவானுடைய மகளான பார்வதி ஒவ்வொரு நாளும் இமாலய மலையில் பூப் பறிக்க வருகின்றாள்.

தாரகாசுரன், பிரம்மா கொடுத்த வரத்தால் தேவர்களைத் துன்புறுத்துகிறான். இந்திரனின் தூண்டுகோலால் தேவர்கள் பிரமனிடம் சென்று ஒரு சேனாதிபதியைக் கேட்கிறார்கள்.

சிவன் ஒருவனால் தான் இக் காரியம் முடியும் என்று கேள்விப்பட்டு, சிவன் பார்வதி மேல் மோகம் கொள்ளும்படி ஏற்பாடு செய்கிறார்கள். காமனை அணுகி வேண்டுகிறார்கள்.

காமன் பார்வதியுடன் சென்று, சிவன் மேல் தன்னுடைய மன்மத பாணங்களைப் பொழிகின்றான். சிவன் தபசு கலைகின்றது.

ஆயினும் உடன் சமாளித்துக்கொண்டு, நெற்றிக் கண்ணைத் திறந்து காமனை எரிக்கின்றான்.

பின்னர், சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடக்கின்றது. காமனும் உயிர்த்தெழுகின்றான்.

பார்வதி அவமானப்பட்டுத் தவம் செய்யப் போகின்றாள்.

அக்கினியின் செயல்

பின்னர் சிவனுக்கு ஒரு மகனும் பிறக்கவில்லை. ஆனால் பின்னால் சேர்க்கப்பட்ட அத்தியாயங்களில், சிவனும் பார்வதியும் தனித்து இருந்தபோது அக்கினி ஒரு புறா உருவில் உள்ளே நுழைகின்றான். இதைப் பார்த்த பார்வதி, சிவனை விட்டுச் செல்கின்றாள்.

சிவனது விந்துவை, புறா உருவில் இருந்த அக்கினி எடுத்துச் செல்கிறான். அந்த விந்தே சரவணப் பொய்கையில் குழந்தையாகப் பிறந்து, கார்த்திகைப் பெண்டிரால் வளர்க்கப்படுகிறது. குமரன் வளர்ந்து சேனாதிபதியாகித் தாரகாசுரனை வெல்லுகின்றான்.

வடமொழியில் உள்ள ஸ்கந்தனைப் பற்றிய கதைகள் மேலே விளக்கப்பட்டன.

வானமாமலையின் கருத்து

தமிழில் ஸ்கந்தன் தோன்றியதைப் பற்றி ஒரு கதை, சிற்பங்களில் உள்ளதை அறிஞர் வான மாமலை, 'ஆராய்ச்சி' இதழில் எழுதிய 'முருக வணக்கம் இரு பண்பாடுகளின் இணைப்பே' என்ற கட்டுரையில் கூறியுள்ளார்.

பிட்சாடனர் சிற்பத்தை அவர் குறிப்பிடுகின் றார். நெடுவேளைப்போல் பிச்சை ஏற்கும் உருவத் தோடு, அம்மணமாகப் பிட்சாடனர் நடக்கின்றார். இடதுபுறம் ஏழு பெண்கள் உடை குலைந்து மார்பு களைக் காட்டிக்கொண்டு முகத்தில் வெட்கம் தோன்ற நிற்கின்றனர். இதைப் பற்றிய கதை பின்வருமாறு :

ஏழு (சப்த) முனிவர்கள் இறைவனை ஏற்க வில்லை. அவர்களது அகம்பாவத்தைப் போக்க இறைவன் முடிவு செய்தான். அவர்கள் இல்லாத சமயம் அவர்களுடைய குடில்கள் (பர்ணசாலைப்) பக்கம், எந்த ஆடையுமின்றிச் சென்றார். பிச்சை யெடுப்பவர் போல மாறுவேடம் தரித்து ஏழு ரிஷி பத்தினிகளையும் கண்டார்.

அவர்கள் அவர்மீது மோகம் கொண்டு, ஆடை குலைந்து காம வேட்கை முகத்தில் தோன்ற, ஓடி வந்தனர். அவர்களைக் கண்டதும் வெளியேறிய விந்தினை, உமை எடுத்துச் சரவணப் பொய்கை யில் இட்டாள்.

இது ஆறுமுறை நிகழ்ந்ததாக அக்கினிக் கதையில் கூறப்பட்டுள்ளதைப் போலவே, தமிழ் நாட்டில் முருகன் தோற்றம் பற்றிய கதைகள் சொல்லும்'

என்று அறிஞர் வானமாமலை கூறியது அரிய செய்தியாகும்.

வடக்கு — தெற்கு வேறுபாடு!

பிட்சாடனர் சிற்பங்கள் பல்லவர் காலத்திலும் பிறகும் பல கோயில்களில் காணப்படுகின்றன; இது கவனிக்கத் தக்கது.

தமிழ் நாட்டில் வடநாட்டுக் கதையைப் பின் பற்றி மாற்றித் தோன்றிய கதையாகும் இது.

அக்கினி குமாரன் என்று சொல்லாது சிவனுடைய குமாரன் என்று தமிழ்நாட்டில் கதை கூறினதற்கு, அறிஞர் வானமாமலை கூறும் கருத்தும் ஒப்புக்கொள்ளத் தக்கதாகும்.

தமிழ் நாட்டில் புகழ்பெற்று வந்த ஸ்கந்தனை, அக்கினி குமாரனாக அறிமுகப்படுத்துவது பொருந்தாது.

சில கதைகள்

புகழ் பெற்ற தந்தை சிவன் பெற்ற மகன் என்று சங்ககாலத்திலேயே சிறப்புப் பெற்ற ஆலமர்

செல்வன் முதலிய பெயர்களைத் தரித்த முழுமுதற் கடவுளான சிவனின் மகனாக ஸ்கந்தனைப் படைத்தனர் என்று கூறியுள்ளார்.

ஆனால் மகாபாரதத்திலேயே, இராமாயணத்திலேயே ருத்ரசிவனின் மகனாக ஸ்கந்தன் கதை கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவேண்டும்.

குமார சம்பவத்திலும் சிவபெருமானின் மகனாகவே ஸ்கந்தன் கூறப்பட்டுள்ளான். பரிபாடலிலும் திருமுகாற்றுப்படையிலும் சிவனே முருகனின் தந்தையாகக் கூறப்பட்டுள்ளது.

பரிசுப் பொருள்கள்

மகாபாரதத்தில் சல்யபருத்தில் சொல்லப்படுவது போலவே ஸ்கந்த முருகனுக்குப் பரிசுகள் வழங்கியதைப் பரிபாடல் குறிப்பிட்டுள்ளது. ஆனால் அவை வெவ்வேறாக இருக்கக் காண்கிறோம். பரிபாடலில் பரிசுப் பொருளை மெய்யிற் பிரித்துக் கொடுத்தார்கள் என்று சொல்வதும் வேறுபட்டதாகும்.

அக்கினி கோழியையும் இந்திரன் மயிலையும் கொடுத்தனர்.

மகாபாரதத்தில் கருடன் மயிலைக் கொடுத்ததாக உள்ளது. இந்திரன் அம்பையும் கொடியையும் கொடுத்தான் என்றும் மகாபாரதம் குறிப்பிட்டுள்ளது.

பரிபாடலில் யமன் வெள்ளாட்டு மறியைக் கொடுத்தான். அது போன்று மற்றவரும் பிற பொருள்களை முருகனுக்குப் பரிசாகத் தந்தனர் என்று உரைக்கப்பட்டுள்ளது.

மெய்யினின்று வாங்கிப் படையாகத் தந்த மறியும் மயிலும் கோழிச் சேவலும் வில்லும் மானும் வாளும் ஈட்டியும் கோடாரியும் மழுவும் கனலியும் மாலையும் மணியும் ஆகியவற்றைப் பன்னிரண்டு கைகளில் ஏந்தினான் என்று கூறப்படும் செய்தி வட நூல்களில் இல்லை.

விஷ்ணு புராணத்தில் கூறியிருப்பவையும் மாறுதலானவையே.

விஷ்ணு சேவலையும் மயிலையும் ஸ்கந்தனுக்குக் கொடுத்தான்; சரஸ்வதி குழலைக் கொடுத்தாள்; பிரம்மா ஆட்டுக்கிடாயைக் கொடுத்தான்; சிவன் செம்மறியாட்டைக் கொடுத்தான் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஆறுமுகங்களின் ஆற்றல்

திருமுருகாற்றுப்படையில் முருகனின் ஆறு முகங்கள் என்னென்ன செய்கின்றன என்று விளக்கிக் கூறியுள்ளது.

இந்த விளக்கம் வடமொழி நூல்களில் இல்லை.

ஒரு முகம், இருள் கெடும்படி பல கிரணங்களைத் தோற்றுவித்தது.

ஒரு முகம் தன்னிடம் வரம் வேண்டுவோருக்கு வரம் கொடுத்தது.

ஒரு முகம் அந்தணருடைய யாகங்களைப் பாதுகாத்தது.

ஒரு முகம் வழங்காத வேதங்களிலும் நூல்களிலுமுள்ள பொருள்களை ஆராய்ந்து, இருடிகள் இரட்சையடையும் திசைகளையெல்லாம் விளக்கியது.

ஒரு முகம் அசுரர்களை அழித்துக் களவேள்வியை விரும்பியது.

ஒரு முகம் குறமகளான வள்ளியோடு மகிழ்ச்சியைக் காட்டியது.

மேலும், முருகனின் பன்னிரு கைகளும் என்ன செய்தன என்பதும் விளக்கப்பட்டுள்ளது. இந்த விளக்கமும் மகாபாரதம் முதலிய பண்டைய வடமொழி நூல்களில் கூறப்படவில்லை.

முருகனுக்குத் தனித்த கோயில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னர்த் தோன்றிய ஆனைமலையிலுள்ள லாடன் கோயிலேயாகும்.

பல்லவர் காலத்தில், முருகன் சோமாஸ்கந்தர் உருவிலே குழந்தையாகக் காணப்படுகின்றான்.

சோழர் காலத்தில் முருகனுக்குத் தனிக் கோயில்களும் செப்புப் படிமங்களும் தோன்றின.

முருகன் ஊர்தி, கொடி யாது?

யானையா? மயிலா?

முருகனுக்குரிய சேவலும் மயிலும் யானையும் குறிப்பிடப்படுவதில், வடமொழி நூல்களிலிருந்து திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும் வேறுபடுகின்றன.

யானை, மயில் ஊர்திகள்

தமிழ் நூல்களில் முதன் முதலில் முருகனுடைய வாகனமாகக் கூறப்பபடுவது யானையாகும்.

'சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறுஊர்ந் தாங்கு'

பதிற்றுப்பத்து : 11—5—6

முருகன் ஊர்ந்த யானையைப் 'பிணிமுகம்' என்றழைத்தனர்.

'ஓடாப் பூட்கை பிணிமுகம் வாழ்த்தி'

திருமுருகாற்றுப்படை : 247

என்று வரும் திருமுருகாற்றுப்படை வரியில் பிணிகுகம் என்பதற்கு, 'பிணிமுகம் என்ற பட்டத்திற்

குரிய யானை'யென்று பொருள் கூறி, 'மயிலுமாம்' முன்று உரையாசிரியர் கூறியுள்ளார். ஆனால், பிணிமுகம் என்றால் யானை என்பது பதிற்றுப் பத்திலிருந்து தெளிவாகத் தெரிகின்றது.

'மணிமயில் உயரிய மாறா வென்றி
பிணிமுக வூர்தி ஒண்செய் யோனும்என'
புறநானூறு : 56

இதன் உரையில்

'மயிற்கொடியை மாறாத வெற்றியையுடைய அம் மயிலாகிய ஊர்தியையுடைய ஒள்ளிய செய்யோன்'

என்று பொருள் கூறப்பட்டுள்ளது.

மயிலே கொடி யென்றும்

மயிலே வாகன மென்றும்

கூறுவது பொருத்தமாக இல்லை.

வடநாட்டில் கி. பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து காணப்படும் ஸ்கந்தனது உருவத்தில் தான, மயில் முதலில்(முருகனது)வாகனமாகக் காட்டப்பட்டுள்ளது.

'ததும்பு சீர் இன்இயங் கறங்கக், கைதொழுது,
உருகெழு சிறப்பின் முருகு மனைத் தரீஇ
கடம்புங் களிறும் பாடி, நுடங்குபு'
— அகநானூறு:138

அகநானூற்றுப் பாட்டில், முருகன் ஏறுவதற்குரிய வாகனமாகிய யானை கூறப்படுவதைக் காணலாம்.

ஆதலின், சங்க காலத்தில் யானையே முருகனின் வாகனமாக இருந்தது. அதற்குப்பின்னர் பிணிமுகம் என்று மயிலை வாகனமாகக் கூறினர் என்றுதெரிகின்றது.

கோழிக் கொடி

முருகனுக்குரிய கொடி கோழிக் கொடியாகும்.

'கோழியோங்கிய வென்றடு விறற்கொடி'

என்று திருமுருகாற்றுப்படை (38) கூறியுள்ளது.

'வாரணக் கொடியோடு வயிற்பட நிறீஇ'

என்று திருமுருகாற்றுப்படை (வரி 219) மீண்டும் கூறியுள்ளது.

ஆனால், கோழிக் கொடி பிற நூல்களில் குறிப்பிடப்படவில்லை; பரிபாடலும் கூறவில்லை.

திருமுருகாற்றுப் படையிலேயே (வரி 122) 'பல்பொறி மஞ்ஞை ஓங்கிய புட்கொடி' (பரிபாடல் 17: 48) என்று கூறியுள்ளது.

அகநானூறும் 'பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய' (149) என்று கூறியுள்ளது.

ஆதலின் மயில்கொடி, கோழிக் கொடிக்கு முந்தியது என்பது தெரிகின்றது.

ஆனால் மயில், முருகனுடைய வாகனமாகியது குப்தர் காலத்திலேயே என்பது தெரிகின்றது.

யாருக்குப் பிள்ளை இவன்?

தாயில்லா மகன்

மகாபாரதக் கதைகளிலும் பரிபாடலிலும் கூறப்படும் கதைகளிலிருந்து முருகனுக்கு உண்மைத் தாய் இல்லை. தந்தையர்தான் இருந்திருக்கின்றனர். முதலில் அக்கினியும் பின்னர் ருத்திரனும் சிவனும் தந்தையாக இருந்துள்ளனர்.

ஸ்கந்தன் சுவாகாவையும் கார்த்திகைப் பெண்டிரையும் தாயாகப் பாவித்ததாக மகாபாரதம் கூறியுள்ளது. ஆனால் அவர்கள் உண்மைத் தாயர்கள் இல்லை.

திருமுருகாற்றுப்படை முருகனின் தந்தையாக ஆலமர் செல்வனை மட்டுமே கூறியுள்ளது.

'செறிவளைக்கை நல்லால் இதுநகையா கின்றே
வெறிகமழ் வெற்பன்நோய் தீர்க்கவரும் வேலன்
வேலன் மடவன் அவனினுந் தான்மடவன்
ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின்'

சிலப்பதிகாரம் — குன்றக்குரவை 13

சிலப்பதிகாரத்திலும் ஆலமர் செல்வன் புதல்வி என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அக்கினி, ருத்திரன் மகனாகக் கூறப்படவில்லை.

தேவாரத்தில் பல பாடல்களிலும் முருகனுடைய தந்தை சிவனே என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால், முருகனுக்குரிய தாயாகக் கூறப்படுபவள் வடமொழியில் உள்ள நூல்களிலிருந்து வேறுபட்டதாக இருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
விழைஅணி சிறப்பிற் பழையோள் குழவி'
—திருமுருகாற்றுப்படை 257-259

'வெண்திரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற
பைம்பூட் சேஎய் பயந்த மாமோ மோட்டுத்
துணங்கையஞ் செல்விக் கணங்குநொடித் தாங்குத்'
— பெரும்பாணாற்றுப்படை 457-459

திருமுருகாற்றுப்படையில் மலைமகள் மகனே என்று கூறியது, பார்வதியின் மகன், என்பதைக் குறித்தேயாகும். சிவபெருமானுடைய மகன் பார்வதியின் மகன் என்று கூறியது இயற்கையே.

ஆனால், கொற்றவை சிறுவ

பழையோள் குழவி

என்று தமிழில் கூறப்பட்டது, வட நூல்களில் காணாத சிறப்புச் செய்தியாகும்.

கொற்றவை தமிழரின் தனித் தெய்வமாகும். 'கொற்றவையை மூவேந்தர்களும் வழிபட்டனர். கொற்றவை சிறுவ என்பதற்கு 'வனதுர்க்கையுடைய புதல்வ' என்று நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார்.

காடுகிழாள்

முருகன் கொற்றவையின் சிறுவன் என்று கூறப்பட்டதில் வியப்பொன்று மில்லை. ஆனால் இன்னும் பொருத்தமாக, பழையோள் குழவி என்று கூறப்பட்டிருப்பதைக் கவனிக்கவேண்டும். பழையோள் குழவி என்பதற்கு,

> 'காடுகாளுடைய குழவி என்றும் (காடுகிழாளென்பது இக் காலத்து, காடுகாளென மருவியது) அவளும் இறைவனுடைய சத்தியாதலில் அவளுடைய குழவியெனறார்'

என்றும் கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

'கறைப்பல் பெருமோட்டு காடுகிழவோளுக்கு, ஒருபெய் சந்தனம் அரைக்கும் பணியைச்செய்த'தாக யாப்பருங்கலவிருத்தி மேற்கோள் பாடல் கூறியுள்ளது.

> 'கையார் வளைக் கை காடுகாள்'

என்று தேவாரத்தில், காடுகாள் அழைக்கப்படுகிறாள்.

> 'வலைவலந்தன்ன மென்னிழல் மருங்கில்
> காடுஉறைகடவுள் கழிப்பிய பின்றை'
>
> பொருநராற்றுப்படை—51-52

முருகனின் தாய்

பெண் தெய்வம்

காடுறை கடவுள் என்பதற்கு, வன துர்க்கை யென்று பொருள் கூறப்பட்டுள்ளது. கலித்தொகை யில் இத் தெய்வமே 'பெருங் காட்டுக் கொற்றி' என்று அழைக்கப்பட்டது.

காடுறை கடவுளின் மகனான முருகன், 'காடுகெழு நெடுவேள்' ஆக அகநானூற்றில் குறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

'கடம்பு கொடி யாத்துக் கண்ணி சூட்டி
வேறுபல் குரல ஒருதூக்கு இன்னியம்
காடுகெழு நெடுவேள் பாடுகொளக்கு ஏற்ப
அணங்கு அயர் வியன்களம் பொலியப் பைய'

—அகம். 382.

காடு கெழு நெடுவேளின் தாயைக் 'காடு கெழு செல்வி'யாகக் கொண்டது மிகவும் பொருத்தமே.

சங்க காலத்திலேயே முருகன் காடுகிழாளின் மகனாகக் கருதப்பட்டான்.

சேய் என்று சங்க நூல்களில் (அகம், 266, புறம் 14, 209, குறிஞ்சிப்பாட்டு 51) முருகனை அழைத்தது, காடு கெழு செல்வியின் மகனாகக் கொண்டதாலே யாகும்.

'செல்வியைப் பாகங் கொண்டார்
சேந்தனை மகனாக் கொண்டார்
மண்ணினை உண்ட மாயன்
தன்னையோர் பாகங் கொண்டார்'

என்று அப்பர் கச்சிமேல்தளி (8) பதிகத்தில் பாடி யிருப்பதைக் கவனிக்க வேண்டும். அப்பர் கூறிய செல்வி, காடுகிழாளே யாவள்.

அதுபோல, சாத்தனையும் சிவனின் மகனாக ஆக்கியது தேவாரத்தில் கூறப்பட்டுள்ளது.

பார்த்ததுக் கருளும் வைத்தார்
பாம்பரை யாட வைத்தார்
சாத்தனை மகனா வைத்தார்
சாமுண்டி சாம வேதம்
கூத்தொடுப் பாட வைத்தார்
கோள்அரா மதிய நல்ல
தீர்த்தமுஞ் சடையில் வைத்தார்
திருப்பயற் றூரனாரே.'

— திருப்பயற்றூர்ப் பதிகம் 317

சிவன் செயல்

எல்லாரையும் பெற்ற தாயான செல்வியைத், தன் பாகத்தில் சிவபெருமான் சேர்த்துக்கொண்டார்.

அவளுடைய மகனாகிய 'சேந்த'னை, அதாவது 'சேயோனை' மகனாக ஆக்கிக் கொண்டார். மேலும் அவர், மாயவனையும் பாகங்கொண்டார்.

சங்க காலத்தில் சிவனோடு தொடர்பேயில்லாத செல்வியும் சேந்தனும், பல்லவர்கள் காலத்தில், சிவனுடன் உறவு படுத்தப்பட்டனர்.

தேவாரத்தில்,

'முதுகோதை யோடாடிய நீள்மார்பன்'

என்றும்,

'போகமார் மோடி கொங்கை
புணர் தரும் புனிதர் போலும்'

என்றும் கூறியிருப்பதிலிருந்து, சிவன் பழையாளோடு ஆடியதும் மோடியை மனைவியாக்கிக் கொண்டதும் தெரிகின்றது.

முதுகோதையும் மோடியும் 'பழையோள்' என்ற பண்டைத் தெய்வமே யாகும்.

சங்கரர் இயற்றிய ஸ்ரீலலிதா சகஸ்ரநாமங்களில் வரும் அம்பிகையின் திருநாமங்களில் 'புராதநா என்ற பெயர், 'பழையோள்' என்பதன் மொழிபெயர்ப்பு என்றே தெரிகின்றது.

தக்கயாகப்பரணி எனும் நூல், (120) 'தொல்லை நாயகி' என்றழைக்கின்றது.

இந்துமத முக் கடவுளுக்கும் முன்னவளாகத் திருப்புகழ், மூவர்க்கு மூனாள்' என்று கூறுகின்றது.

இந்தப் பழையோளையே பராசக்தி என்றும், சக்தி தெய்வங்களுக் கெல்லாம் மூல காரணமான ஆதி சக்தித் தெய்வ மென்றும் இந்து மதத்தில் இணைத்தனர்.

கதம்பர்

கடம்பனான முருகனையும் முருகனின் தாயை யும் வழிபட்டுத் தோன்றிய குடியினரான கதம்ப ருடைய வழிபாடு, சங்ககாலத் தமிழரிடையே இருந்த வழிபாடேயாகும்.

சங்க காலத்தில் முருகனுக்குத் தாயாக இருந்த காடுகிழாளைப், பல்லவர்கள் காலத்தில் உமாவாக வும் பார்வதியாகவும், சிவபெருமானுடன் தொடர்பு படுத்தினர்.

ஆனால் பல்லவர் காலத்தில் சாத்தனுக்கோ, வைரவனுக்கோ தாயாகப் பார்வதியைக் கூற வில்லை.

சங்க காலத்தில் முருகனுக்குத் தாயாகக் காடுகிழாளைக் கூறியபோது, தந்தையாகக், காடு கிழாளின் கணவனாக யாரையும் கூறவில்லை.

இதைத் தாய்வழித் தெய்வத்தின் எச்சமாகக் கருத வேண்டும்.

பண்டைக் காலத்தில் தாய் வழிச் சமுதாயமே சிறந்திருந்தது.

அந்தச் சமுதாயத்தில் தந்தையை முக்கிய மாகக் கருதுவதில்லை.

ஆதலின் முருகனுக்குச், சங்க காலத்திற்கு முன்னர்,

தந்தையைக் குறிப்பிடாது

தாயையே குறிப்பிட்டிருப்பர்.

அசுரர்கள்

முருகனுக்கு வெறியாடும் வேலன் என்போன், பழங்குடி மக்களினத்தைச் சேர்ந்தவன். இனக்குழு மக்களின் (Tribals) தெய்வமாகப் பழையோரைக் குறிப்பிட்டிருப்பதிலிருந்து, முருகன் முதலில் இனக்குழு மக்களின் தெய்வமானவன் என்பது தெரிகின்றது[1].

தாரகன் - மகிஷன்

ஸ்கந்தன் அழித்த அசுரர்களாக மகிஷன், தாரகாசுரன் என்பவர் வடமொழி நூல்களில் கூறப்பட்டுள்ளனர்.

வடமொழியிலும் காவிய காலத்தில் (Epic Period) தாரகாசுரனைப் பற்றிய செய்திகளில்லை. மகிஷனைப் பற்றிய செய்தி உள்ளது.

ஆனால், அந்த மகிஷனைக் கொன்றது ஸ்கந்தனின் தாயே என்று கருத இடமுண்டு.

ஆதலின் ஸ்கந்தன் கொல்வதற்காக, ஒரு புதிய அசுரனைத் தோற்றுவிக்க வேண்டியிருந்தது போலும். அவனே தாரகாசுரன்.

காவிய காலத்திற்குப் பின்னர் வந்த புரா ணங்களில் தாரகாசுரனின் கதை கூறப்பட்டுள்ளது.

காளிதாசன் இதை விளக்கமாகக் கூறி யிருப்ப தால் இது கி.பி. நான்காம் நூற்றாண்டில் தோன்றி நன்கு பரவிவிட்டது எனக் கருதலாம்.

ஆனாலும் தாரகாசுரனைப் பற்றிய கதை சங்க நூல்களிலோ, திருமுருகாற்றுப்படை யிலோ, பரிபாடலிலோ கூறப்படாதது வியப்பைத் தருகின்றது.

'கார் நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்
சூர்நவை, முருகன் சுற்றத்து அன்ன, நின்
கூர்நல் அம்பின் கொடுவில் கூளியர்.

—புறநானூறு 23

'சூர்மருங்கு அறுத்த சுடர்இலை நெடுவேல்'

—அகநானூறு 59

'நளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி
'அணங்குடை அவுண ர்ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறன்வேள் களிறூர்ந்து ஆங்கு'

—பத்துப்பாட்டு 11 : 3—6

ஈரஅணிக்கு ஏற்ற ஒடியாப் படிவத்துச்
சூர்கொன்ற செவ்வேலாற் பாடி, பலநாளும்,

—கலித்தொகை 93

'... ... ... மாக்கடல் நடுவன்
நீர்த்திரை அரங்கத்து நிகர்த்துமுன் நின்று
சூர்த்திறங் கடந்தோன் ஆடிய துடியும்'

—சிலப்பதிகாரம் 50 : 49—51

தாரகாசுரனைக் கூறவில்லை. ஆயினும் சூரபன்மா என்ற அசுரனைப்பற்றிச் சங்க நூல்களும் சிலப்பதி காரமும் கூறியுள்ளது. சங்க நூல்களில் 'சூர்' என்று அழைக்கப்படும் அவுணனுடன் முருகன் போரிட்ட தாகக் கூறப்பட்டுள்ள செய்தி வடமொழி நூல்களில் இல்லை. சூர் என்னும் இந்த அவுணனைப் பற்றித் திருமுருகாற்றுப்படை கூறியுள்ளது.

'பார் முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்'

—திருமுருகாற்றுப்படை 45—46

'சூர்மருங்கு அறுத்த மொயிம்பின் மதவலி
போர்மிகு பொருத குரிசில் எனப் பலப்'

—திருமுருகாற்றுப்படை 275—276

'தோயுடை நுடங்குசூர் மாமுதல் தடிந்து'

—பரிபாடல் 5 : 4

'கடுஞ்சூர் மாமுதல் தடிந்து அறுத்தவேல்'

—பரிபாடல்

'நீர்நிரந்து ஏற்ற நிலம்தாங்கு அழுவத்துச்,
சூர், நிரந்து சுற்றிய, மா தபுத்த வேலோய்! நின்'

பரிபாடல் 18 : 3—4

'இருபேர் உருவின் ஒருபெ ரியாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர் மண்டி
அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்'

— திருமுருகாற்றுப்படை 57--61

'உரவுநீர் மாகொன்ற வென்வேலான்'

—கலித்தொகை 27

'மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப் போர்
வேல் வல்லான் நிறனேபோல் வெருவந்த சேயும்
ஆங்குஅப்'

—கலித்தொகை 104

'பார்இருப் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலை'

—சிலப். குன்றக்குரவை, பாட்டுமடை 7

'உரவுநீர் மாகொன்ற வேலேந்தி ஏத்தி'

—குன்றக்குரவை, பாட்டுமடை 8

கந்தபுராணத்துக்கு அடிப்படைக் கதை

சூர் எனப்படுவோன் கடல் நடுவில் மாமர உருவில் இருந்தானென்றும் அவனை அவனுடைய சுற்றத்தோடு அறுத்தான் என்றும் கூறப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் நீர்ப் பரப்பையே அரங்காகக் கொண்டு சூரனை வென்று, முருகன் துடிக் கூத்து ஆடினான் என்று கூறப்பட்டுள்ளது. இந்தச்

சிறு செய்தியே பிற்காலத்தில் கந்தபுராணத்தில் சூரன்மாவின் கதையாக விரிவாக்கப்பட்டு, பல கிளைக் கதைகளுடன் வழங்கலாயிற்று.

'இரு பேருருவின் ஒரு பேரியாக்கை' என்ற திருமுருகாற்றுப்படை (57) வரிக்கு,

> 'மக்கள்வடிவம் விலங்கின் வடிவமாகிய இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாகிய பெரிய உடல்

என்று உரை கூறப்பட்டதைக் காணலாம்.

'ஈரணிக்கேற்ற வொடியா படிவத்துச் சூர்' என்ற கலித்தொகை (93) வரிக்கு,

> 'கெடாத விரதத்தாலே முகம் குதிரை முகமும் உடல் மக்களுடனுமாகிய சூரபன்மா'

என்று நச்சினார்க்கினியர் உரை யெழுதியுள்ளார்.

தக்கயாகப் பரணியிலும் 'சூருடைய ஈருடம்பு' என்பதற்கு 'அசுர சேனாப்தி பட்டு விழ, அவனுடைய குதிரையும் அசுரனுமான இரண்டு வடிவும்' என்று உரை கூறப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

தொல்காப்பியச் செய்யுளதிகார உரையில் (152), நச்சினார்க்கினியர் காட்டிய மேற்கோளில், 'ஈர் உருவத்து ஒரு பெருஞ் சூர் மருங்கு அறுத்த விறல் வெய்யோய்' என்று கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

முருகன் வாழ்விடங்கள்

தூய்மைமிகு கோயில்கள்

முருகனுக்கு சங்க காலத்திலேயே கோயில் இருந்ததை அறிய முடிகின்றது.

'அணங்குடை முருகன் கோட்டத்துக்
கலம்தொடா மகளிரின் இகந்து நின் றவ்வே'

—புறநானூறு 299

'நீநீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர்
வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்
நெடுவேள் அநிலைஇய காமர் வியன்துறை
கழனி உழவர் கலிசிறந் தெடுத்த
கறங்குஇசை வெரீஇப் பறந்த தோகை'

— புறநானூறு :55

'அணங்குடை வரைப்பகப் பொலியவந் திறுக்கும்
திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேஎயொடு உற்ற சூளே'

— அகநானூறு : 266

சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
சினமிகு முருகன் தன்பாங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை'

— அகநானூறு : 59

'கொடி நுடங்கு மறுகில் கூடல் குடாஅது
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய
ஓடியா விழவின், நெடியோன் குன்றத்து'
—அகம் 149

திருச்செந்தூர், திருப்பரங்குன்றம்

சங்க காலத்திலேயே திருச்செந்தூரிலும் திருப்பரங்குன்றத்திலும் முருகனுக்கு கோயில்கள் இருந்திருக்க வேண்டும். திருச்செந்தூர் 'செந்தில்' என்று அழைக்கப்பட்டுள்ளது. அலைவாய் என்றும் அழைக்கப்பட்டது.

'நாமனூர் அலைவாய்' என்று பொருள் கூறப்பட்டது.

நாமம் என்பதற்கு, 'அச்சம்' என்ற பொருள், தொல்காப்பிய உரிச்செல் நூற்பாவில் (67) கூறப்பட்டுள்ளது.

ஆதலின், நாமன் என்ற சொல், அச்சத்தைத் தருபவன் என்று பொருள் தரும். முருகனுடைய பெயர்க் காரணத்தை இதுவும் குறிக்கும்.

அந்துவன் என்ற புலவன் பாடிய அகநானூற்றுப் பாடலில், சந்தன மரங்கள் நிறைந்த திருப்பரங்குன்றத்திலும் முருகன் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

சங்கநூல்களில் இந்தச் செந்தில், திருப்பரங்குன்றம் ஆகியவை முருகன் இருப்பிடங்களாகக் கூறப்பட்டுள்ளது.



ஸ்கந்தா—கார்த்திகேயா (பாஸார், கார்வால்)
கி.பி. 8—9ஆம் நூற்றாண்டு

கார்த்திகேயா — பிரம்மாவுக்கு உபதேசித்தல் (பைஜ்நாத் அருங்காட்சியகம்)





லாலாபகத் எனும் இடத்திலுள்ள
தூண் சிற்பங்கள்
தூணின் மேற் பகுதியில் உள்ள சிற்பம்



தூணின் கீழ்ப் பகுதியில் உள்ள சிற்பம். யானை
(கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டு)
(நூல் பக் 93-94)

திருமுருகாற்றுப்படை வேறு சில ஊர்களையும் கூறும். அவை மிகப் பிற்பட்டவை. சங்க காலச் செய்திகளை ஒட்டியவை இல்லை.

நாமனூர் அலைவாயாகிய செந்திலில், கழனி யுழவர் செய்த, ஒலிக்கின்ற ஆரவாரத்தினை அஞ்சி, மயில் பறந்து போய்த் தெய்வத் தன்மையுடைய திருச்சீரலைவாய் வரைப்புக்குள் வந்து தவழும் என்று கூறப்பட்டுள்ளது. அதனால் இந்த மயில்கள், முருகனுக்கு நேர்ச்சிக்காக விடப்பட்ட மயில்கள் என்று தோன்றுகிறது.

மயில், குறிஞ்சி நிலத்திற்குரிய பறவையாகும். அதை மருத நிலத்தில் கூறியிருப்பதால், அது இயற்கையாக வாழும் சூழ்நிலையில் கூறப்பட வில்லை என்பது தெரிகின்றது. இன்று கோழிகளை நேர்ச்சிக்காகக் கோயில்களில் விடுவதுண்டு.

திருப்பரங்குன்றத்து முருகன் கோயில் சிறப்பும் புகழும்உற்றதாக விளங்கியது. அதனால் அந்துவன் என்ற புலவன் பாடலில் 'சந்துகெழு நெடுவரை' என்று கூறப்பட்டுள்ளது.

முற்காலக் கோயில்கள்

முருகன் கோயிலைப் பற்றிய செய்திகள் போல, பிற கடவுளரின் கோயில்களைப் பற்றிச் சங்க நூல் களில் செய்திகள் இல்லை.

அறிஞர் நீலகண்ட சாத்திரியார் அவர்கள், கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் ஆந்திர நாட்டில், திருஷ்னா குண்டூர் பகுதியில், ஸ்கந்தனுக்கு நாகார்ஜுன பள்ளத்தாக்கில், கோயில் கட்டியதைக் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு முன்னரே கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் முருகனுக்குக் கோயில்கள் தமிழ் நாட்டில் தோன்றி விட்டன என்பது கவனிக்கத் தக்கதாகும்.

முருகன் உருவம் யாது?

சான்றுகள் இல்லை

தமிழகக் கோயில்களில் எத்தகைய உருவம் வணங்கப்பட்டது, வழிபடப்பட்டது என்பது தெரியச் சான்று ஏதுமில்லை.

முருகனது சின்னமான வேல் வழிபடப் பட்டிருக்கலாம்.

உருவம் வணங்கப்பட்டதா என்பது மேலும் ஆராய்வதற்குரியது.

முருகன் வழிபாடு, தமிழ்நாட்டில் சங்க காலத் தொன்மை வாய்ந்தது என்பதை அறிந்தோம்.

ஆனால், அதற்குரிய கல்வெட்டுச்சான்றோ; கற் சிற்பச் சான்றோ, புழங்கி வந்த நாணயக் குறிப்பு களோ கிடைக்கவில்லை என்பது சிந்திக்கத் தக்கது.

ஆனால், அதே காலத்தில், அதற்குச் சிறிது முன்னர், வட நாட்டில் ஸ்கந்தனைப் பற்றி இத்தகைய சான்றுகள் கிடைத்துள்ளன.

நாணயங்களில் உருவம்

வட இந்தியாவில் யௌதேயர்களுடைய கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குரிய நாணயங்களில் ஆறு தலையுடைய கார்த்திகேயன் உருவம் உள்ளது.

பிராமண்ய ஸ்கந்தன் என்றும் யௌதேயர்களுடைய தலைவன் என்றும், வாசகம் நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

குமரனான 'பிராமண்ய', தேவர்களின் தலைவன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குஷாணர்களுடைய கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நாணயங்களில்,


ஸ்கந்தன், குமரன்,

மகாசேனன், விசாகன்

என்ற பெயர்கள் காணப்படுகின்றன.

உஜ்ஜயினி நாணயங்களில் கி. மு. மூன்று—இரண்டு நூற்றாண்டுகளில் பிராமண்ய, குமர என்ற வாசகம் இருப்பதை நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிட்டுள்ளார்

வடநாட்டில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டி லிருந்து குப்தரின் இறுதிக் காலமாகிய ஐந்தாம் நூற்றாண்டு வரை, வெற்றியைத் தரும் அரசனின் சின்னமாக ஸ்கந்தன் இருந்திருக்கிறான் என்று தெரிகின்றது.



யௌதேயர்களின் நாணயங் களில் ஒன்றிற்குமேல் ஒன்றாக, இரண்டு அடுக்காக, மூன்று தலைகள், அதாவது மொத்தம் ஆறு தலைகள்காணப்படுவதால், ஸ்கந்தன் என்பது எளிதில் தெரிந்து கொள்ளப்முடிகிறது.

அதுபோல் அந்த நாணயங்களின் பின் பக்கத் திலும் சஷ்தி (சஷ்டி) ஆறுதலைகளுடன் காணப்படு வதும் ஸ்கந்தனுடைய சின்னம் என்பதைக் காட்டு கின்றன.

கல்தூண் சிற்பம்

கான்பூருக்கு அருகில் உள்ள லாலா பகத் (Lala Bhagatt) என்ற இடத்தில் ஒரு முக்கியமான கல்தூண் அகப்பட்டுள்ளது.

இந்தத் தூணில் இருக்கும் சிற்பத்தின் மேலே, சில காட்டு வாத்துக்கள் பறப்பது போலவும் அதன் கீழே சூரியதேவனை இரண்டு பெண் தெய்வங்கள் தொழுவது போலவும் உள்ளது.

இதற்கு முன்னால், சில பெண் தெய்வங்களும் குள்ளத் தெய்வங்களும் காணப்படுகிறார்கள்.

கீழே தோகை விரித்தாடும் மயில் காணப்படு கின்றது.

அதற்கடியில் ஒரு யானை, தாமரைத்தண்டைப் பிய்த்துக் கொண்டிருப்பது போலக் காணப்படு கின்றது.

அதற்கும் அடியில் கஜலட்சுமி உருவமும் அதை ஒட்டிச் சேவலைத்தாங்கிய ஒரு தூணுருவமும் காணப்படுகின்றன. (இணைப்பு படம் பார்க்க.)

கி. பி. ஒன்று அல்லது இரண்டாம் நூற்றாண் டுக்குரிய இந்தக் கற்சிற்பத்தில், 'குமரவரா' என்ற வாசகம் காணப்படுகிறது.

இந்தக் கற் சிற்பத்தில் முருகனுக்குரிய மயிலும், யானையும், கோழியும் காணப்படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

பல்லவர் காலப் பணி

வட நாட்டில் ஸ்கந்தனுக்குரிய தொன்மை யான உருவங்களைக் கண்டோம். ஆனால் தமிழ் நாட்டில் அத்தகைய தொன்மையுடைய சிற்பங் களையோ, உருவங்கள், வாசகங்கள் பொறித்த நாணயங்களையோ காண முடியவில்லை.

பல்லவர் காலத்திலேயே, அதற்குச் சிறிது முன்னர் வடநாட்டிலிருந்து ஸ்கந்தனுடைய வழிபாடு தமிழகம் பரவி, அது முருக வழிபாட்டோடு இணைக்கப்பட்டது.

இது கி. பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில் நன்கு பரவி, பல்லவ குல மன்னர்களால் போற்றப்படும் வழிபாடு ஆயிற்று என்று புலனாகின்றது.

முருகன் வழிபாடு தொடக்கம்?

ஆய்வாளர் கருத்துகள்

நீலகண்ட சாத்திரியார் முருகு என்ற பெயர், பெர்சிய மொழியில் உள்ள 'முருக்' (Murugh) என்ற பெயரிலிருந்து வந்ததென்றும் அதுவே செண்ட் அவஸ்தா Zend Avesta) என்ற பாரசீகர் வேதமொழியில் முருக் (Muruk) என்று மாறியதாகவும் கூறியுள்ளார்.

இவ்வாறு கருதுவதற்கு நெடுந்தொலைவும் நெடுங்காலமும் இடைப்பட்ட ஒலியொற்றுமையும் தவிர, வேறொரு காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, இந்த முடிவு ஏற்றுக் கொள்ளத் தக்க தன்று.

கார்மார்க்கர் என்ற அறிஞர், தான் எழுதிய The Vratya Dravidian systems - Lonovala (1950 p. 128) எனும் நூலில், ரிக் வேதத்தில் பல தடவை காணப்படும் மூரதேவா (Mura devah) என்ற தெய்வம் முருகன் என்ற பெயருடன் உச்சரிப்பில் ஒத்துள்ளமையைக் குறித்து எழுதியுள்ளார்.

யௌதேயர்களுடைய காசுகளில் பிரமண்ய என்று ஸ்கந்தன் அழைக்கப்பட்டாலும், 'சுப்பிரமண்ய' என்பது, சுப்பிரமணிய என்பதாக மாற்றி வழங்கப் பெற்றுள்ளது.

தென்னகத்தில் அதிலும் தமிழ்நாட்டில் இவ்வாறு வழங்கப்படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

பழைய சான்றுகள்

ஆனால், முருக வணக்கத்தின் தொன்மை, சங்க காலத்திற்கும் மிகவும் முற்பட்டது என்று கருதுவதற்குச் சான்றுகள் இல்லாமலில்லை.

ஆதிச்சநல்லூரில் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட தாழி கிடைத்திருக்கின்றது. அகழ்வாராய்ச்சியில் கிடைத்த தங்க வாய் மூடிகளும் இரும்புக் கொழுவும், பாலஸ்தீனத்தில் கிடைத்த கல்லறைப் பொருள்களை ஒத்துள்ளன.

பெருங் கற்கால நாகரிகமான ஆதிச்சநல்லூர் நாகரிகக் காலத்தைச் சிலர் கி. மு. 800 ஆண்டுகட்கு முன் கொண்டு செல்வர்.

கிழக்கு மத்திய தரைக்கடல் நாகரிகத்திற்கும் தமிழரது ஆதிச்சநல்லூர் நாகரிகத்திற்கும் பல பண்பாட்டு ஒற்றுமைகள் உள்ளன.

தங்க வாய் மூடிகள், திரிசூலம், சேவல் உருவங்களும் காணப்பட்டன.

'இது, தொடக்க கால முருக வணக்கம்' என்பது வரலாற்றறிஞர் கே. கே. பிள்ளையவர்களின் கருத்தாகும்.

ஆதலின் முருக வணக்கம், பெருங் கற்கால நாகரிகத்தில் (Megalithic civilization), தமிழ்நாட்டில் வளர்ந்த வளர்ச்சி, ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வுப் பொருள்களிலிருந்து தெரிகின்றது.

முருக (வேலன்) வணக்கம், புதிய கற்கால நாகரிகத்தைச் (neolithic period) சேர்ந்த நாகரிகம் என்று பலர் கருதுவர்.

சிலர் பழங் கற்கால நாகரிகத்திற்கும் கொண்டு செல்வர்.

வள்ளி முருகன் கதை!

முருகன் புதிய கற்கால வேட்டைத் தெய்வம் என்றும் கருதுவர்.

வேட்டையாடி உணவைத்தேடும் நாகரிகத்தைக் குறித்த தெய்வமாகலாம்.

அது போன்று, வள்ளி, உணவைச் சேகரித்து உண்ணும் நாகரிகத்தினை (food gathering civilization) குறித்த தெய்வமாகலாம்.

காடுகெழு செல்வி பெற்ற முருகனுக்கு, வேட்டைத் தெய்வமான முருகனுக்கு, காதல் மனைவியாக வள்ளியைக் கூறுவதைச் சங்க நூல் களிலேயே, நற்றிணையில் பார்க்கிறோம்.

வள்ளி — ஒருகதை

'முருக புணர்ந் தியற்ற வள்ளி போல' என்று நற்றிணை (82) கூறியுள்ளது.

வள்ளியின் பிற்காலக் கதையில், வள்ளிக்கிழங்கை தோண்டிய குழியில் பிறந்ததால், வள்ளி என்ற பெயர் பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது. இது வள்ளி என்று பெயர் பெற்றதை விளக்குவதற்குப் புனையப்பட்ட கதையாகும்.

உணவில் வள்ளி

பழங்குடி மக்களான குறவர் உணவைச் சேகரித்து உண்பர் என்று கூறுவர். அவர்கள் கிழங்கு கல்லி யெடுத்தும், தேனெடுத்தும் வாழ்ந்த தாகக் கதைகள் கூறும்.

பாரியது பறம்பில், உழவர் உழாது பெறும் விளைவுகள் நான்கனுள் வள்ளிக்கிழங்கு வீழ்க்குதல் (அகழ்ந்தெடுத்தல்) பற்றிக் கூறப்பட்டுள்ளது.

மலைவாழ்நர் தவறு புரிந்தால், அவர்களுடைய சிறுகுடியில் வள்ளிக்கிழங்கு கீழ் வீழ்க்காது. மலையில் தேன்கூடு கட்டாது என்று நம்பினர் என்பதை கலித்தொகைப் பாடல் (39) கூறியுள்ளது.

வள்ளிக்கிழங்கு மிகப் பழங்காலத்தில் பசிபிக் தீவுகளில் வாழ்ந்த மக்களின் அடிப்படை உணவாகவும் இருந்ததை வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர். இந்த வள்ளிக்கிழங்கை ஆள்வள்ளிக் கிழங்கு என்று அழைப்பர். இதில் காட்டில் வாழும் வகையைச் சேகரித்து, இன்றும் காட்டில் வாழும் மக்கள் உண்கின்றனர். இந்தக் கிழங்கு Dioscorea species என்ற இனத்தைச் சேர்ந்த தாகும்.

ஆதிமனிதன் நிலை

மனிதன் வேட்டையாடி உணவு தேடியதற்கு முன், புல்வகைத் தானியங்களைப் பயிரிட்டு வந்தான். அதற்கு முன் உழைப்பு மிகுதியின்றிக் காய்களையும், கனிகளையும், கிழங்குகளையும் தின்று வாழ்ந்தான்.

இவ்வாறு கிடைத்த வள்ளிக்கிழங்கையே ஆதி மனிதன், செழிப்பிற்கும் உற்பத்திக்கும் அறிகுறியாகக் கொண்டான். ஆதலின் இந்தச் 'செழிப்புத் தெய்வத்'திற்கு வள்ளி என்று பெயரிட்டான்.

முருகனும் வள்ளியும் இணைந்தது, சேர்ந்தது வேட்டையாடும் நாகரிகமும் (Hunting civilization) உணவைச் சேகரிக்கும் நாகரிகமும் (food gathering civilisation) கலந்த தொன்றாகும்.

நெல்லைப் பயிரிட்ட காலம், உழவுத் தொழில் பண்பட்ட மக்கள் வாழ்ந்த காலமாகும்.

புதிய கற்காலத்தில் வாழ்ந்தவர்கள் (Neolithic age) மெடிட்டிரேனியன் குடியினருக்கு முற்பட்டவர் Proto-Meditteranean) என்று கருதப்படுகின்றனர். இவர்கள்தாம்

துடியன்

பாணன்

பறையன்

கடம்பன்

என்று ஊகித்தறியலாம். இவர்கள் பயிரிட்ட உணவு வரகும், தினையும், கொளளும், அவரையும் என்று அறிதல் வேண்டும்.

'கருங்கால் வரகே, இருங்கதிர்த் தினையே,
சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு
இந்நான்கு அல்லது உணாவும் இல்லை;
துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று
இந்நான்கு அல்லது குடியும் இல்லை;
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி,
ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது,
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே,
-புறநானூறு : 335

நெல்லை இந்த நான்கு குடிகளும் முதலில் உணவாகப் பயிரிடவில்லை என்று தெரிகிறது. இவர்களுக்குப் பின்னர் வந்த குடிகளே பயிரிட்டிருக்கின்றனர். இவர்கள் திராவிடர்களாக இருக்கலாம்.

கடம்பன்

குடிகளின் பெயர்களில் கடம்பன் என்ற பெயர் வருகின்றது. கடம்பன் என்பது முருகனுக்குப் பெயராக வழங்கியது.

கடம்பு மரத்தைக் குலக் குறிச் சின்னமாக உடையவராகக் கடம்பர் குடி இருந்திருக்கலாம்.

பிற்காலத்தில் தோன்றிய கதம்ப மன்னர்கள் இந்த மரத்தை வழிபட்டனர். மேலும் அவர்கள், சுவாமி மகாசேனன் என்ற ஸ்கந்தனையும், மாத்ரு கணங்கள் என்பவற்றையும் குலதெய்வங்களாகக் கொண்டனர்.

இப்பொழுது மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வாழும் பழங்குடிகளில் சில இனக்குழு மக்கள் (Tribes), பழங்கால நாகரிகத்தினர் என்று கருதலாம்.

சிந்துவெளி முத்திரை

உருவங்கள்

அறிஞர்கள் சிலர் சிந்து வெளி நாகரிகத்தில் ஸ்கந்தனுடைய வழிபாட்டைக் காண்கிறார்கள். டி.ஆர். ஆராவமுதன் என்னும் அறிஞர், ஒரு முக்கிய முத்திரையை விளக்கியுள்ளார்.

அந்த முத்திரையில்,

அரசமரத்தில் ஒரு கடவுளும்

அதற்கு முன்னால் முழங்கால் போட்ட ஒரு கடவுளும்

அதற்குமுன்னர் ஒரு பீடத்தில் அறுபட்ட மனிதன் தலை ஒன்றும்

காட்டப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

முழங்காலிட்டுக் காணப்படும் கடவுளுக்குப் பின்னர் ஒரு ஆட்டுக்கிடாய்த் தலையுடைய மனிதனாகக் கொண்டுள்ளார்.

இதற்கு முன்னர் ஏழு பெண்கள் காணப்படுகின்றனர்.

இந்த ஆட்டுக்கிடாய்த் தலையுடையவன் அக்கினியென்றும்,

ஏழு பெண்டிரும் கார்த்திகைப் பெண்டிரென்றும்,

அஸ்வதமரம் பிரம்மன் என்றும்



அவர் குறிப்பிட்டுள்ளார். அஸ்வத மரத்தின் எதிரில் முழங்காலிட்டிருப்பவன் கார்த்திகேயன் என்றும் கூறியுள்ளார்.

கேனா உபநிஷத்தில் (Kena Upanished) இருக்கும் இந்தக் கதையைச், சிந்துவெளி முத்திரையில் காணப்படும் காட்சியோடு இணைத்துக் காட்டியுள்ளார் திரு. ஆராவமுதன். இந்தக் கருத்தை வடநாட்டு அறிஞர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஈராஸ் அடிகள் கருத்து

அறிஞர் ஐராவதம் மகாதேவனும் ஃபின்னிஷ் அறிஞரும் இந்த முத்திரை எண் 4230ஐ ஆராய்ந்து எழுதி யுள்ளனர்.

ஃபின்னிஷ் அறிஞர்களுக்கு முன்னர், ஈராஸ் அடிகள் சில முத்திரைகளை ஆராய்ந்துள்ளார். வேலன் என்ற பெயரும் முருகன், ஆடு என்ற பெயரும் தொடக்க கால முத்திரையில் காணப்படுவ தாக அவர் எழுதி யுள்ளார்.

இச் சாடியிலுள்ள முத்திரையைப்பற்றி அவர் எழுதிய Studies in Proto - Indo Meditteraninan Culture என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சாடியின் அருகில் காணப்படும் ஏழு பேரும் பலியிடுவதற்காக நிறுத்தப்பட்டுள்ளார்கள் என்று அவர் கருதுகிறார்.

திரு. மகாதேவன் கருத்து

ஐராவதம் மகாதேவன் அவர்கள், சாடியில் உள்ள பூசாரி என்ற முத்திரையைப் பற்றி ஒரு விளக்கம் கொடுத்துள்ளார்.

கொம்புடைய ஓர் ஆடையற்ற ஆள், சாடியுள் இருக்கவும் சாடியைச் சுற்றி, அரச இலை அலங்கரிக்கப்பட்டு இருக்கிறதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் சாடிக்கு முன்னால் இன்னொரு கொம்புடைய, ஆடையற்ற ஆள், மண்டியிட்டுப் பலியிட்ட கோழிக்கு முன்னால் இருக்கிறான். ஒரு ஆடு அவனுக்குப் பின்னால் இருக்கிறது. கீழே ஆடையணிந்த ஏழு பேர்கள் உள்ளனர்.

இந்தக் காட்சியை,

அகத்தியரும் ஏழு வேளிரும்

என்று ஐராவதம் மகாதேவன் கருதுகிறார்.

அகத்தியரைக் கும்ப முனியென்று அழைக்கப்படுவதை, அவர் இது சார்பாகக் கவனத்திற்குக் கொண்டு வருகின்றார்.

இக் காட்சி, வேளிர் வரலாற்றைக் குறிக்கிறதென்றும் அவர் கூறுகின்றார்.

வேறொரு விளக்கம்

ஆனால், ஃபின்னிஷ் அறிஞர்கள் 1970 ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் தேதியிட்ட 'இந்து' இதழில் இதை வான சாத்திரப்படி ஆராய்ந்துள்ளனர்.

அஸ்வதம் தெய்வ மென்றும்

ஏழுபேர்கள் பெரிய கரடி (The Great bear) என்ற நட்சத்திரக் கூட்டத்தைக் குறிக்கு மென்றும் அவர்கள் கொண்டனர்.

பிரம்மனுடன் தொடர்புடைய சித்திரம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால், முழு எழுத்துக்களையும் படிக்க முடிய வில்லை.

சாடியினுள் கொம்பையுடைய ஒரு தெய்வம் காணப்படுகின்றது.


சாடிக்கு முன்னால், மண்டியிட்டுக் கொம்புடன் அமர்ந்திருக்கும் உருவம், சாடிக்குள் இருக்கும் தெய்வத்தின் தலைமைப் பூசாரி யாவான்.

இந்தப் பூசாரி இரண்டு கொம்புடைய தலையணியை அணிந்திருக்கின்றான்.

பூசாரிக்குப் பின்னால் ஓர் ஆட்டுக் கிடா காணப்படுகின்றது.

ஆட்டுக் கிடா மனிதன் இல்லை.

அதோடு கீழ்க்கண்டவாறு மூன்று பிரிவுகள் உள்ள, நான்கு சதுர வடிவிலான சின்னம் ஒன்று கடைசியில் உள்ளது.



தலைமைப் பூசாரிக்குப் பின்னால் உள்ளது பலி கிடாவாகும். அவனுக்கு முன்னால் இருப்பது மனிதன் தலையாகும் என்று திரு. ஆராவமுதன் கருதுகிறார்.

ஆனால் மகாதேவன் அதனைக் கோழித்தலை என்று கருதுகிறார்.

இந்தச் சிற்பம் தெளிவாக இல்லை. சாடியில் பலியிடப்பட்ட ஆட்டின் இரத்தம் கலந்த தானியம் போடப்பட்டு, சாடியில் உள்ள தெய்வத்திற்குப் பலி களத்தில் சாந்தி அளிக்கப்படும்.

> சாடியில் உள்ள தெய்வச் சித்திரம், பலியினால் சாந்தி செய்யப்படுகிற தெய்வத்தைக் குறிக்கும். இந்த முத்திரையே வேலன் வெறியாடல் சடங்கைக் குறிக்கின்றது என்று ஊகிக்கலாம்.

மண்டியிட்டு இருக்கும் பூசாரி வேலன் ஆவான். சாடியில் உள்ளிருக்கும் தெய்வம் வேலன் ஆவாகனப்படுத்தும் முருகன் ஆகும்.

அவனுக்கு இரத்தப் பலியிட்டு, அதைச் சதுரமான கட்டத்தில் தெளித்து, முருகனைச் சாந்தி செய்வதே முத்திரையில் முக்கியமானது.


பூசாரி முன்னால் உள்ள சதுரம், மூன்று பிரிவுகளையுடைய களமாகும். இச் சதுரம், மூன்று பிரிவுகளைக் கொண்ட களம் என்று கொள்ள வேண்டும்.

சங்க காலக் கவிஞர்கள் களத்தைப் பற்றிக் கூறியுள்ளனர்.

களம் அமைப்பு

பண்டைக் கால வழிபாட்டில் களம் மிக முக்கியம் வாய்ந்தது. சாடியின் ஓரத்தில் காணப்படும் அரசு இலை (அஸ்வதம்), வேலனின் வழிபாட்டுச் சடங்கில் முக்கியமானதாகும். சிந்துவெளி முத்திரைகள் பலவற்றில் அரசமரத்தின் இலைகளும் கிளைகளும் புனிதமாகக் கருதப்பட்டுப் பொறிக்கப்பட்டுள்ளன.

களஞ்சியம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு நேரான குறியீடு மொகஞ்சோதரா முத்திரைகளில் இவ்வாறு காணப்படுகிறது:



மௌரியர் காலத்து நாணயங்களில் களஞ்சியத்தைக் குறிக்கும் சித்திரத்தோடு இது ஒத்திருக்கிறது. இதை ஜி. எம். பொன்கார்டு லெனின் 'இந்தியன் ஸ்டடீஸ்' பத்திரிகையில் (Indian Studies Volume No. 2-1-60) எழுதியுள்ள கட்டுரையில் தெளிவாக விளக்கி யிருக்கிறார்.

மொகஞ்சோதரா முத்திரையில் களஞ்சியத்தைக் குறிக்கும் குறியீடு மேற்குறிப்பிட்ட களஞ்சியத்தோடு பெரிதும் ஒத்திருக்கிறது.

'களம்' என்ற சொல்லும் களஞ்சியம் என்ற சொல்லும் ஓசையிலும் பொருளிலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. எனவேதான் இரண்டுக்கும் ஏறத்தாழ ஒரே மாதிரியான குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஏழு மகளிர்

தலைமைப் பூசாரியும் கொம்புடைய அத்தெய்வமும் முத்திரையில் முருகனோடு தொடர்புபட்ட ஏழு (சப்த) மாதர்களும் காணப்படுகிறார்கள். ஏழு வேளிரும் என்று உரையாசிரியர் கூறும் சங்க நூற் செய்தியைக் குறிப்பிடுகின்றது என்று அறிஞர் ஐராவதம் மகாதேவன் கருதுகின்றார். ஆயினும் அவர்கள் சப்த மாதர்களைக் குறிக்கலாம்.

வாதாபியை ஆண்ட சாளுக்கிய மன்னர்கள், சப்த மாதர்களை வணங்கினர். இவர்கள் வேளிர் குலத்தைச் சேர்ந்தவர்கள். மஹாசேனன் எனப்படும் கார்த்திகேயன் ஏழு மாதர்களின் அடிகளில்

அமர்ந்து வணங்குவதாகக் காட்டும் சிற்பங்கள் உள்ளன.

வேளிர்கள் பற்றிய துவக்க காலச் செய்திகளில் அவர்கள் ஸ்வாமி மஹாசேனரையும் (முருகனையும்) சப்த மாதர்களையும் வணங்கியதாகக் குறிப்பிடப்படுகிறார்கள்.

பழமையும் பிற்காலமும்

இவ்வழிபாட்டை அகத்தியர் ஓமத்தீ வளர்த்துச் செய்த வைதீக வழிபாடு என்று கூறுவது சரியாகாது.

ஏனெனில் புராதன காலத்தில் இரத்தப் பலி கொடுத்து வழிபடுதலே வழக்கில் இருந்திருக்க வேண்டும்.

தண்ணீராலும், ஓமத்தீ வளர்த்தும் வழிபடும் வழக்கம் பிற்காலத்தைச் சேர்ந்தது.

பழந்தமிழ்ச் செய்திப்படி வேளிர் குலம், சாடியிலிருந்து தோன்றியதாகக் கூறப்படுகிறது.

முத்திரையில் உள்ள காட்சி, முருகனை வேளிர் குலப் பூசாரியான வேலன் வழிபடுவது சித்தரிக்கப் பட்டுள்ளது.

கடம்பர்கள், யாதவர்கள், சாளுக்கியர்கள் மற்றும் சில அரச பரம்பரையினர் வேளிர் குலத்தில்

தோன்றியவர்கள் என்று மு. ராகவ அய்யங்கார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

முத்திரையில் காணப்படும் காட்சி, முருகனை வேளிர் குலத் தலைமைப் பூசாரியான வேலன் வழிபடுவதாகக் கொள்ளலாம்.

தொன்மை ஒளி

முருகன் சேய்

அறுமீன் காதலன்

என்ற பெயர்கள் ஃபின்னிஷ், சோவியத் அறிஞர்களால், அரப்பா நாகரிக சித்திர எழுத்துகளில் காட்டப்பட்டுள்ளது.

அரப்பாவில் அறுமீன் என்ற கார்த்திகை நட்சத்திரம் கூறப்பட்டிருப்பதில் ஐயமில்லை.

இவைகளிலிருந்து தமிழர் வணங்கும் பெரும் பெயர் முருகனின் தொன்மை சிந்துவெளி நாகரிகம் வரை செல்கின்றது என்பதை ஊகிக்கலாம்.

இதை மேலும் ஆராய்வது பயன் தரும்.

★

சொல்லடைவு

நூல்கள்

★

எழுத்தாளர் முதலியோர்

மக்கள் குலம்

இடங்கள்

காலம்

*

பொது

★

சங்க நூல்களில் முருகன்

அறிஞர் பி. எல். சாமி